பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 24 வியாழக்கிழமை 06.06.2024 கதிர் 211

# மன்னாரில் காற்றாலையை வழங்கிய முறை சரியானதா?

## அரச திணைக்களங்களிடம் விவரம் கேட்கிறது ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம்

**இந்தியா அதானி குழுமத்தின் மன்னார் மற்றும் பூநகரியின் காற்றாலை மின் திட்டம் தொடர்பான வெளிப்படைத்தன்மை சட்டபூர்வமானதன்மைமதிப்பீட்டுசெயல்முறை விலை நிர்ணயம் அரசின் ஈடுபாடு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பா** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொ-து வேட்பாளரை நிறுத்துவது என்றுபுறப்பட்டகுடிமைச்சமூகங்கள் (சிவில் சமூகம்) சிலவற்றின் கூட்டிணைவு தனது குறிக்கோள் மற்றும் கட்டுமானம் குறித்த தடுமாற்றத்தில் இருந்துதற்போதுதான்தெளிவுபெற்று வருகின்றது. முதலில் இந்தக் கூட்டிணைவு அரசியல் கட்சிகள் மற்றும் குடிமைச் சமூகங்கள் இணைந்த கட்டமைப்பை உருவாக்கும் என்றுதான் ஏப்ரல் 30 அறிக்கையில் குறிப்பிட்டிருந்தன. ஒரு மாத காலத்தின் பின்னர் இப்போதுதான்குடிமைச்சமூகத்திற்கே ஒரு கட்டமைப்புத் தேவை என்கிற புரிதலுக்கு அவை வந்து சேர்ந்திருக்கின்றன.

இது தொடர்பில் வைக்கப்பட்ட விமர்சனங்களை சதிக் கோட்பாடு, சூழ்ச்சிக் கோட்பாடு, தமிழனைத் தமிழன் சந்தேகிக்கும் கோட்பாடு என்றெல்லாம்சகட்டுமேனிக்குவிளாசி வந்த இந்தக் குடிமைச் சமூகங்கள் சிலவற்றின் இந்தப் புதிய ☞ 2

## தமிழ் பொது வேட்பாளர் முயற்சி பயனற்ற ஒன்று

### சம்பந்தர் மீண்டும் வலியுறுத்து

தமிழ் பொது வேட்பாளர் முயற்சி பயனற்ற ஒன்று, ஜனாதிபதியைத் தீர்மானிக்கிறவர்களாகத் தமிழ் மக்கள் இருக்கவேண்டும் என்பதுதான் தனது நிலைப்பாடு என்று தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இருவரையும் இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் ☞ 8

## ஆசிரியர் வெற்றிடங்களில் 60 வீதம் நிரப்பப்பட்டுவிட்டது

### கல்வி அமைச்சர் தகவல்

மாகாணப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் செயற்பாடு கடந்த மாதம் ஆரம்பித்ததாகவும், தற்போது மாகாணப் பாடசாலைகளில் 60 வீதத்தை விட அதிக ஆசிரியர் வெற்றிடங்கள்நிரப்பப்பட்டுநிறைவடைந்துள் ளதாகவும் கல்வி அமைச்சர் பேராசிரியர் சுசில் ☞ 8

## பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர் சேர்க்கை வீழ்ச்சி

### பிறப்பு வீதக் குறைவே காரணம் என்கிறார் அமைச்சர்

பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக தரம் ஒன்றிற்கான மாணவர் சேர்க்கை வீழ்ச்சியடைந்து வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்க்கட்சியால் நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புவேளை விவாதத்தில்கலந்துகொண்டு, உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் 330,000ஆக காணப்பட்ட இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதம், தற்போது300,000ஆக ☞ 10

## சூற்றுச்சூழலுக்கு உகந்த பிள்ளைகளை பாடசாலைகள் மூலம் உருவாக்குங்கள்

### இராஜாங்க அமைச்சர் அழைப்பு

எவ்வளவுதான்தொழில்நுட்பம் வளர்ந்தாலும் இயற்கையின் பாதிப்பில்இருந்துவிடுபடமுடியாது. எனவே, சுற்றுச்சூழலைபாதிக்காத வகையில் வாழ வேண்டும். அதற்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த பிள்ளைகளை பாடசாலைகள் மூலம் உருவாக்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பது மோசமான விளைவை ஏற்படுத்தும் என்பதை பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும் என்று மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற உலக சுற்றாடல்தினநிகழ்விலேயேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இயற்கைக்கு கட்டுப்படாத எதுவும் இல்லை. எனவே, நாம் அனைவரும் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும். கடந்த சில நாட்களாக நம் நாட்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு வளர்ந்த நாடான டுபாய் நாட்டிலும் ☞ 9

## தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் கூட்டிணைவு பொதுச் சபையாகியது

வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட தமிழ் குடிமைச் சமூகத்தின் கட்டமைப்பை இனி மேல், 'தமிழ் மக்கள் பொதுச்சபை'எனஅழைப்பதுஎன்றுதீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை ஒன்றின் மூலம் நேற்று புதன்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான ஏப்ரல் 30 கூட்டிணைவின் பிரதிநிதிகள் கலந்துரையாடல்ஒன்றைநடத்தி இதனை ஏகமனதாகத் தீர்மானித்தனர் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:---

குடிமக்கள் சமூகக் கூட்டிணைவின் 30.04. 2024 வவுனியாத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பொதுச்சபைக் கூட்டம் 05.06.2024 புதன்கிழமை அன்று யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள ☞ 2

## சிறுவனைத் துன்புறுத்திய சந்தேகநபர்களுக்கு மறியல்

சமூக வலைத் தளங்களில் பரவலாக பகிரப்பட்டுவந்த,சிறுவன் கடுமையாகதாக்கப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஐவரும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று பிற்பகல் பதவிய சுற்றுலா நீதிவான் மன்றத்தில் ஆஜர்படுத்தியதை தொடர்ந்து விளக்கமறியலில் ☞ 9

## கொரிய நாட்டு அதிகாரிகள் சபாநாயகருடன் சந்திப்பு

கொரியசட்டவைத்திய ஆலோசனை மற்றும் கல்வி நிறுவனத்தின் அதிகாரிகள் சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்தனவை அண்மையில் நாடாளுமன்றத்தில் சந்தித்தனர்.

இதன்போது நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸஅபேரத்ன ஆகியோரும் ☞ 9

## மோடியின் ஆட்சி, நிர்வாகத்துக்கு கிடைத்ததே இந்த தேர்தல் வெற்றி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் புகழாரம்

இந்தியாவில்மூன்றாவது தடவையாகவும் மோடி பிரதமராவது அவரது ஆட்சி, நிர்வாகத் திறனுக்குக் கிடைத்த வெற்றி என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றைமுன்வைத்து, இந்திய தேர்தலில் வெற்றிபெற்ற பிரதமர் மூடிக்கு வாழ்த்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இந்தியாவின்ஜவகர்லால் நேரு பிரதமருக்கு பின்னர்தொடர்ந்துமூன்றாவது தடவையாகப் பிரதமர் பதவி வகிக்க மோடிக்கு ஆணை கிடைத்திருக்கிறது. ☞ 9

## காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள பணத்தை நாமேதான் தேடவேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

வெப்பமண்டலப் பிரதேசம்என்றவகையில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்குத் தேவையான பணத்தை நாமே தேடிக்கொள்ள வேண்டும்எனஇலங்கை முன்மொழிந்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில்நேற்றுநடைபெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருட, உலக சுற்றாடல்தினம் மிகவும் முக்கியமான நேரத்தில் கொண்டாடப்படுகிறது. உலகளாவிய ☞ 9

## மைத்திரிக்கு கால அவகாசம்

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக கடமையாற்றிய தயாசிறிஜயசேகரவின் கட்சிஉறுப்புரிமையை இரத்து செய்து வெளியிடப்பட்ட கடிதம் மீளப்பெறப்படுமா, இல்லையா என்ற தீர்மானத்தை அறிவிப்பதற்கு பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு உயர் நீதிமன்றம் நேற்று கால அவகாசம் வழங்கியது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதவியிலிருந்து தம்மை நீக்கியமைக்கு எதிராக தயாசிறி ஜயசேகரவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டுமனு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே ☞ 10

# நீதியான தேர்தலை நடத்துவது ஆணைக்குழுவின் பொறுப்பு

## பிரதம நீதியரசர் ஜயசூரிய தெரிவிப்பு

எத்தனை தடைகள் ஏற்பட்டாலும் சுதந்திரமாகவும் நீதியாகவும் தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பு என பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாததன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, காமினி அமரசேகர, முர்து பெர்னாண்டோ மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியர்சர்கள் அடங்கிய அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நிர்ணயித்தவாறு நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்ததாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதன்போது தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்கப்படாமையால் ஏற்பட்ட நெருக்கடி நிலைகளிலிருந்து தப்பிப்பதற்கு, அரசாங்கம் தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றஞ்சுமத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான அனைத்து தீர்மானங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துடன் எடுக்கப்பட்டவை என மன்றில் குறிப்பிடப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகியவற்றால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்களில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## இனி இது .....

கூட்டிணைவு தற்போதுதான் தாம் கட்டமைப்பாக இருக்கவேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொண்டு அதற்கான அடியை எடுத்து வைத்திருக்கிறது. இருந்தாலும் இந்தக் கூட்டிணைவின் கொள்கைத் தெளிவு இன்னமும் மேம்படவேண்டியிருக்கின்றது.

நேற்றையதினம் ஈழத் தமிழ் உலகின் முதல் போராளி பொன்.சிவகுமாரனின் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. உரும்பிராயில் உள்ள சிவகுமாரனின் சிலை முன்பாக இடம்பெற்ற இந்த அஞ்சலிக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் அரசுக் கட்சித் தலைவர், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்கள் ஆகியோரும் பங்கெடுத்திருந்தனர். ஆனால், இந்தக் கூட்டிணைவின் முக்கிய தூண்களில் ஒருவரான யோதிலிங்கம் இந்த அஞ்சலி நிகழ்வைப் புறக்கணித்து, சிவகுமாரனின் உடைக்கப்பட்ட உருவச் சிலை வைக்கப்பட்டிருந்த இடத்தில் தனியாக அஞ்சலி செலுத்தினார்.

பொது அஞ்சலி நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் கலந்துகொண்டமையால் யோதிலிங்கம் அதில் கலந்துகொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது. அதாவது ஆளும் தரப்போடு உள்ள டக்ளஸ் கலந்துகொள்ளும் நிகழ்வில்கூட கூட்டிணைவைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ளத அளவிற்குத் தம்மைத் தூய தமிழ்த் தேசியவாதிகளாக அடையாளப்படுத்த முற்படுகின்ற அதேவேளை, அரச புலனாய்வு அமைப்பினால் பாதுகாக்கப்பட்டு, உருவாக்கப்பட்ட, படையினரையே தமது ஒளிப்பதிவாளர்களாகக்கொண்டிருந்த காட்சி ஊடகம் ஒன்றின் தலைவரால் உருவாக்கப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவரை கூட்டிணைவின் முக்கிய தூணாகவும் கொண்டிருக்கின்றனர். அந்தக்காட்சி ஊடகத்தின் தலைவரும் தெற்கு அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினராகவும் யாழ்ப்பாணத்தில் அந்தக் கட்சியை வளர்ப்பதில் முக்கியமானவராகவும் இருப்பவர். அவருடனும் அவரது ஆளுடனும் ஒரு பக்கதில் சேர்ந்து செயற்பட்டுக்கொண்டு மறுபக்கத்தில் தாம்மைத் தூய தமிழ்த் தேசியவாதிகளாகவும் நிலைநிறுத்த முயற்சிக்கும் கூட்டிணைவின் தடுமாற்றம் இன்னும் தெளியவில்லை.

இந்த விடயத்தில் மற்றொரு விடயத்தையும் சுட்டிக்காட்டலாம். தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்கும் சுமந்திரனைச் சந்தித்து அதுகுறித்து இந்தக்கூட்டிணைவினர் பேசிய போதும் பொது வேட்பாளரை எதிர்க்கும் தெற்கில் ஆளும் தரப்பை ஆதரிக்கும் கட்சிகளையோ அல்லது தெற்கு அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களையோ இவர்கள் சந்தித்துப் பேசவில்லை. தமிழ்த் தேசியத்தை அவர்கள் ஏற்கவில்லை என்பதே அதற்குத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு. அதே குற்றச்சாட்டைத்தான் சுமந்திரன் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் முன்வைக்கிறார். ஆனால் கூ-ட்டிணைவினர் சுமந்திரனுடன் பேசுகிறார்கள், அமைச்சர் டக்ளஸுடனோ அங்கஜனுடனோ பேசுகிறார்கள் இல்லை. அல்லது இலங்கை அரசை ஏற்றுக்கொள்ளும் தரப்பினர் எவருடனும் பேசுகிறார்கள் இல்லை. அதேநேரம் இராணுவப் புலனாய்வாளர்களுடனுன் சேர்ந்தியங்கியவர்களின் பிரதிநிதியைத் தமக்குள் ஒருவராக, முக்கிய செயற்பாட்டாளராக முன்னிறுத்துகின்றார்கள். அவர் தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கிறார், பொது வேட்பாளரை ஆதரிக்கிறார் என்று கூட்டிணைவினர் சுட்டிக்காட்டினாலும் அவர்களது தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதுதான் தமது நோக்கம் என்கிற அவர்களது இலக்குத் தொடர்பில் அவர்களுக்கு முழுமையான தெளிவு இருப்பதாகப்படவில்லை.

ஒன்றில் தமிழ்த் தேசியத்தை ஆதரித்து தமிழ்ப்பொதுவேட்பாளரை ஏற்கும் தமிழர்களை மட்டும் ஒருங்கிணைப்பவர்கள் தாம் என்று அவர்கள் தமது செயற்பாட்டை தீர்க்கமாக வரையறுக்கவேண்டும். அல்லது அவர்கள் சொல்வது போன்று தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைப்பதற்காகத் திறந்த மனதுடன் அவர்கள் முயற்சிக்கவேண்டும். கட்டமைப்பு விடயத்தில் அவர்கள் இப்போது ஒரு தெளிநிலைக்கு வந்திருப்பதைப் போன்றே இதுவிடயத்திலும் இன்னும் ஓரிரு மாதங்களில் அவர்கள் தெளிவடைவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

இதற்கிடையில், தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக ஜூன் 9 ஒரு பொது விவாதத்தை நடத்த இந்தக் கூட்டிணைவினர் (நேற்று முதல் அவர்கள் தமிழ் மக்கள் பொதுச் சபையினர்) சுமந்திரனுடனான சந்திப்பில் இணங்கியிருந்தபோதும் பின்னர் அதிலிருந்து பின்வாங்கிவிடுவர், அந்த விவாதம் நடக்காது என்று ஏற்கனவே இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தேன். கூட்டிணைவினரின் 2ஆவது உத்தியோகபூர்வ அறிக்கையில் காணப்பட்ட அவர்களின் தொனியில் இருந்து அவர்கள் விவாதத்திற்கு வரமாட்டார்கள் என்பதைக் கூறியிருந்தேன். நேற்று அதனை உறுதிப்படுத்தியிருக்கிறார் பொதுச்சபை எனப்படும் கூட்டிணைவின் பேச்சாளரான அரசியல் பத்தி எ-ழுத்தாளர் நிலாந்தன்.

சுமந்திரன் ஒழுங்கு செய்யும் விவாதத்தில் பங்குபற்றுவீர்களா என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, ''ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ள பகிரங்க கலந்துரையாடலுக்கு எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், நாம் அதனை நிராகரிக்கின்றோம். பொது வேட்பாளர் தேவையா? இல்லையா? என்பதைக் கடந்த 2019 ஆம் ஆண்டே பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு ஆராய்ந்துவிட்டது. அக் குழு ஒரு கட்டத்தின் பின்னர் இயங்கவில்லை என்பது வேறு விடயம். ஆனால், பொது வேட்பாளர் வேண்டுமா? இல்லையா? என்ற விடயம் ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டுவிட்டது.

இப்போது எங்களிடம் எழ வேண்டிய கேள்வி என்னவென்றால் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதா அல்லது தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிப்பதா என்பதே. பொது வேட்பாளர் வேண்டுமா? இல்லையா? என்ற கேள்வியை எங்கள் அரசியல் எப்போதோ கடந்து வந்துவிட்டது" - என்றார். அப்படியென்றால் சுமந்திரனுடனான சந்திப்பில் ஏன் விவாதத்திற்கு இணக்கம் தெரிவித்தார்கள் என்பதற்கு அவர் விளக்கம் எதுவும் சொல்லவில்லை. முதலில் சொல்வது ஒன்றும் பின்னர் 'சூம்' போட்டு யோசிப்பது ஒன்றுமாகத்தான் இவர்களின் போக்கு இருக்கும் போல....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ன தகவல்களை கோரி ட்ரான்ஸ் பேரன்சி இன்டர் நெஷனல் சிறீலங்கா தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட அரசநிறுவனங்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளது.

இது குறித்து டிரான்ஸ்ப ரன்சி இன்டநஷனல் தெரிவித்துள்ளதாவது:

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அதானி கிரீன் எனர்ஜி (ஶ்ரீலங்கா) லிமிடெட் மன்னாரில் 250 மெகாவாட் மற்றும் பூநகரியில் 234 மெகாவாட் இரண்டு காற்றாலைகளுக்கு தற்காலிக அனுமதியைப் பெற்றது. முக்கியமான பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ள இந்தத் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லாதது குறித்து ட்ரான்ஸ்பேரன்சி இன்டர் நெஷனல் பெரிதும் கரிசனை கொண்டுள்ளது.

இதுதொடர்பான முன்மொழிவை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டு 2024 மே 6 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த விலைக்கும் காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் ஒரு யூனிட் மின்சாரத்தின் தற்போதைய உலகளாவிய விலைக்கும் இடையே பெரும் வித்தியாசம் உள்ளது.

மேலும் உலகில் இடம்பெயர்ந்த பறவைகளின் முக்கியமான பாதையான மன்னார் வழித்தடத்தில் காற்றாலை விசையாழிகள் நிறுவப்படுவது சுற்றுச்சூழலுக்கு மீள முடியாத தீங்கு விளைவிப்பதாக சிரேஷ்ட சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எச்சரித்துள்ளனர். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு செயல்முறையின் நம்பகத்தன்மை குறித்தும் கரிசனை எழுப்பப்பட்டுள்ளன.

இந்த குறிப்பிடத்தக்க விடயங்கள் காரணமாக ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் நிறுவனமானது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மொத்தமாக 11 விண்ணப்பங்களை முக்கிய அரச அமைப்புகளிடம் தாக்கல் செய்துள்ளது. இதில் அமைச்சரவை அலுவலகம் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு நிதி அமைச்சு நிலையான எரிசக்தி அதிகாரசபை மத்திய சுற்றாடல் அதிகாரசபை இலங்கை மின்சார சபை சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு ஆகிய அரச நிறுவனங்கள் அவற்றில் உள்ளடங்குகின்றன.

இந்த விண்ணப்பங்கள் பின்வருவனவற்றைப் பற்றிய தகவல்களைத் கோருகின்றன:

1.விலைமானுக்கோரல் செயன்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும்சட்டபூர்வத்தன்மை:இலங்கை அரசு விலைமானுக்கோரல்களை மேற்கொண்டதா அல்லது முன்மொழிவுகள் பெறப்பட்டதா என்பது குறித்த விவரங்கள்.

2.மதிப்பீடு மற்றும் தேர்வு செயன்முறை: மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையானது அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்திற்கு திட்டத்தை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் மற்றும் அடிப்படை நியமங்கள் தெளிவுபடுத்துதல் விலைமானுக்கோரல்களின் மதிப்பீடு மற்றும் விலைமானுக்கோரலில் தேர்வுசெய்யப்பட்ட நிறுவனம்/நபர் தேர்வுசெயல்முறையில் பங்கேற்கும் நபர்களை அடையாளம் காண்பது மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தித்திட்டமானது அரசுக்கு அரசு என்ற அடிப்படையிலான ஏற்பாடா என்பது பற்றி தெளிவுபடுத்துதல்.

3.விலை நிர்ணயம் மற்றும் செலவு நன்மைகள்: இலங்கைக்கான எரிசக்தி மற்றும் செலவு நன்மைகளை நிரூபிக்கும் ஆவணங்கள் திட்டத்திற்காக தீர்மானிக்கப்பட்ட அலகு விலை மற்றும் சந்தை விகிதங்களை விட அதிக விலை நிர்ணயம் ஆகியவற்றை நிரூபிக்கும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஆவணங்கள்.

4.தேவை மற்றும் அபாய மதிப்பீடுகள்: திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட தேவைகளின் மதிப்பாய்வு மற்றும் அபாய மதிப்பாய்வு பற்றிய விவரங்கள் மற்றும் சாத்தியமான அபாயங்களை தவிர்க்கும் முறைகள்.

5.முடிவெடுக்கும் செயன்முறை: கோரப்படாத திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் முன்மொழிவு கோரிக்கைகளுக்கான பதில்கள் மற்றும் முடிவெடுக்கும் செயன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் தகவல்தொடர்புகள் பகுப்பாய்வுகள் மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகள்ஃகுறிப்புகள் ஆகியவற்றின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகள்.

6.சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் அடிப்படையில் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் பகுப்பாய்வு மற்றும் அங்கீகாரத்தை வழங்குவதற்கான முடிவை விவரிக்கும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணங்கள்.

7. காணி கையகப்படுத்துதல்: மன்னார் மற்றும் பூநகரியில் காணிகளைக் கையகப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதா காணிகள் கையகப்படுத்தும் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறை பின்பற்றப்படுகிறதா? கையகப்படுத்த அனுமதிக்கப்பட்ட காணிகளின் அமைவிடம் பரப்பு மற்றும் எல்லை நிர்ணயம் குறித்த அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஆவணங்கள்.

இந்த தகவல் கோரிக்கைகளில் பலவற்றிற்கு இதுவரை முழுமையான மற்றும் சரியான நேரத்தில் பதில்கள் கிடைக்காததால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகளிடம் மேன்முறையீடு செய்வதன் மூலம் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நமது நாட்டின் வளங்களின் பாதுகாவலராகக் கருதப்படும் ஆளும் தரப்பு இந்த முக்கியமான திட்டத்தின் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் நாட்டின் மற்றும் மக்களின் நலனுக்காக இத்திட்டம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவும் அர்ப்பணிப்புடன் இருக்குமாறு ட்ரான்ஸ்பேரன்சி கேட்டுக்கொள்கிறது.

## தமிழ் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் விடுதியில் நடைபெற்றது.

அதில், இதுவரை வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட தமிழ் குடிமக்கள் சமூகத்தின் கட்டமைப்பை இனிமேல், 'தமிழ் மக்கள் பொதுச்சபை' என அழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப்பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்து முடித்தவுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி செயற்படுவது என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கான ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டல் குழுவும் இருபத்திஐந்து பேரை உள்ளடக்கிய தலைமை ஒருங்கிணைப்புக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தலைமை ஒருங்கிணைப்புக் குழுவில் இருந்து தமிழ் மக்கள் சபைக்குரிய செயற்குழுக்கள் தெரிவுசெய்யப்படும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதத்தின் இறுதி சனிக்கிழமைகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் மக்கள் பொதுச்சபை கூடி தேவையான முடிவுகளை எடுக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த கூட்டத்தில் தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் 83 பேர் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், இந்தக் கூட்டம் சம்பந்தமாக அரசியல் பத்தி எழுத்தாளர் நிலாந்தன் தெரிவித்ததாவது:

தமிழ் குடிமக்கள் சமூகம் சில நாட்களுக்கு முன்னதாக கூடி தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்களை முன்னெடுத்திருந்தன. அதன் அடிப்படையில் அப்பேச்சுக்கள் பற்றிய விடயங்கள் சில நாட்களுக்கு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது குடிமக்கள் சமூகங்கள் இணைந்து தமிழ் மக்கள் பொதுச்சபை என்று செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளன. அத்துடன் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதில் பிரதானமாக ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான மக்கள் அபிப்பிராயத்தை அந்தக்கட்டமைப்பு கட்டியெழுப்பவுள்ளது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதாரப் பிரச்சினைகளை நிறைவு செய்து நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரே தலைவர் ரணில்

## சிவநேசதுரை சந்திரகாந்தன் புகழாரம்



பொருளாதாரப் பிரச்சினைகளை நிறைவு செய்து, நாட்டை சரியான பாதையில் வழிநடத்தக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாத்திரமே எனவும் எனவே, மக்கள் ஆதரவுடன் மீண்டும் ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்டு எதிர்காலத்தில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவார் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அத்துடன், சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகளை உடனடியாக புனரமைப்பதற்கு சுமார் 03 பில்லியன் ஷரூபாவை ஒதுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் -

கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஒதுக்கிய நிதியில் இருந்து சுமார் 12 பில்லியன் ஷரூபா நிதியைப் பயன்படுத்தி, கிராமிய வீதிகளையும், பாலங்களையும் அமைக்கின்ற வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். எமது அமைச்சின் ஊடாக சுமார் 65 சதவீதமான பணிகளை ஆரம்பிக்கக் கூடியதாக இருந்திருக்கின்றது. எதிர்வரும் நாள்களில் இப்பணிகளை முழுமையாக நிறைவு செய்து கிராமங்களுக்கு அவற்றின் பலனைக்கொண்டு சேர்ப்பதற்கு அவசியமான விடயங்களை அமுல்படுத்தி வருகிறோம்.

கடந்த வருடங்களில் கட்டுமானத்துறை வீழ்ச்சியடைந்திருந்தது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு மற்றும் கட்டுமானத் துறையில் ஈடுபட்ட சாதாரண தொழிலாளர்களுக்கும் சிக்கல்களை எதிர்கொண்டனர். ஆனால் தற்போது நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைவதோடு மக்களின் வருமானத்தையும் உயர்த்தி, கட்டுமானத்துறையை அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. எனவே இவ்வாறு நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றி தெரிவிக்கிறேன். இதன் ஊடாக கிராமியப் பொருளாதாரமும் எதிர்காலத்தில் வளர்ச்சியடையும்.

மேலும், தற்போது நாட்டின் அதிகமான பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கிராமிய வீதிகள் சேதமடைந்துள்ளன. எனவே வெள்ளத்தால் சேதமைடைந்த வீதிகளை துரிதமாக புனரமைக்க ஜனாதிபதி சுமார் 03 பில்லியன் ஷரூபா நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அந்த வகையில் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மேப்படுத்துவதற்கான பணிகளை நாம் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றோம்.

முக்கியமாக இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. எதிர்காலத்திலும் மக்களின் நம்பிக்கையை வென்று, இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும்.

மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு கடந்த கால பொருளாதார நெருக்கடியால் இடைநடுவே கைவிடப்பட்டிருந்த அபிவிருத்திப் பணிகளை நிறைவுசெய்து மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் தற்போதும் நடைபெற்று வருகின்றன.

அதிகமான விபத்துகள் இடம்பெறும் வீதிகள் மற்றும் பாலங்கள் ஆகியவற்றின் பணிகள் கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்த பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது நாட்டின் நல்ல நிலைமை குறித்து மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். நாட்டை முன்னோக்கிக்கொண்டு செல்ல வேண்டுமென்றால், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தாண்டி உறுதியாக எல்லோரையும் அரவணைத்து செயற்பட வேண்டும். அதே போன்று இப்போது இருக்கின்ற உலகளாவிய பிரச்சினைகளோடு சரியான இடத்திற்கு நாட்டைக் கொண்டு செல்லக் கூடிய ஒரு தலைவராக நாங்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பார்க்கிறோம். எனவே அவர் மக்கள் ஆதரவுடன் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் பலமான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவார்.

முக்கியமாக, நான் ஒரு சிறுபான்மை மக்களின் பிரதிநிதி என்ற வகையில் நானும் நம்புகிறேன். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் எமது பிரச்சினைகள் குறித்து சிறப்பான சில முன்னெடுப்புகளைச் செய்துகொண்டு வருகின்றார். மேலும், நம்பிக்கைக் கொள்ளக்கூடிய அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மாகாண சபை முறையை நாங்கள் பலமாகக் கட்டமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறிவருகின்றார்.

இவற்றை அடுத்த வருடம் அமுலாக்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். - என்று கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேலும் தெரிவித்தார். (05)

# யாழில் மோடியின் வெற்றியை கொண்டாடியது சிவசேனை








நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. வெற்றிபெற்றதன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துமுகமாக இலங்கை சிவசேனை அமைப்பு மற்றும் இலங்கை உருத்திரசேனை அமைப்புகளின் ஏற்பாட்டில் வெற்றி கொண்டாட்ட நிகழ்வு யாழ்.நகரிலுள்ள வைரவர் ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

கற்பூரம் கொளுத்தப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று சிதறுதேங்காய்கள் உடைக்கப்பட்டன. பின்னர் பொதுமக்களுக்கு மோதகம், லட்டு பரிமாறப்பட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பட்டாசு கொளுத்தியும் வெற்றியைக் கொண்டாடினர். (05)

# யாழில் கைதான போலி வைத்தியர் பல பெண்களிடமும் பண மோசடி

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

வெளிநாடுகளில் வசிப்போர்களை இலக்கு வைத்துப் பல லட்சம் ஷரூபா மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் கைதான போலி வைத்தியரை விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ்,நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர், பாடசாலை மாணவிகள் பலருடன் காதல் தொடர்புகளை பேணி வந்துள்ளமையுடன், வெளிநாடுகளில் வசிக்கும் தன்னை விட வயது அதிகமான பெண்களுடனும் காதல் தொடர்புகளைப் பேணி அவர்களை மிரட்டி , பல லட்சம் ரூபாக்களைப் பெற்று வந்துள்ளார். அத்துடன் இளைஞனிடம் இருந்து மீட்கப்பட்ட தொலைபேசிகளில் பல பெண்களின் அந்தரங்க புகைபடங்கள் காணொளிகள் உள்ளன எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் தன்னை வைத்தியர் என அறிமுகப்படுத்தி , அதற்கான போலியான ஆவணங்களையும் தயாரித்து வெளிநாடுகளில் வசிக்கும் நபர்களை இலக்கு வைத்துப் பல லட்ச ரூபா மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த இளைஞரை திங்கட்கிழமை யாழ்.நகரப் பகுதியில் அதிசொகுசு காரில் இளைஞன் பயணித்துக்கொண்டிருந்த வேளை பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வேளை இளைஞன் 15 பவுன் நகையை அணிந்திருந்ததுடன் , 5 இலட்சம் ரூபா பணத்தை செலவுக்கு என வைத்திருந்துள்ளார். அத்துடன் 05 அதிநவீன தொலைபேசிகள் , பல வங்கி அட்டைகள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டு இருந்தனர்.

இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல போலி உறுதி முடிப்புக்கள் , காணி மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இளைஞன் தனித்து குறித்த மோசடிகளில் ஈடுபடவில்லை எனவும் , இவருக்குப் பின்னால் பெரும் கும்பல் ஒன்று மோசடிக்கு உதவி புரிந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

அதேவேளை இளைஞனின் வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்களை ஆராய்ந்து , இளைஞன் யார் யாருடன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பணப் பரிமாற்றங்களில் ஈடுபட்டார் என்பது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்து , தொடர்புடைய நபர்களை விசாரணை வலயத்திற்குள் எடுத்து விசாரணை செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை மன்று இளைஞனை விளககமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (05)

# 5 கிராம் ஹெரோயின் போதையுடன் வவுனியாவில் 24 வயது யுவதி கைது

*வவுனியாவில் 5 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 24 வயது யுவதி ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி றிஸ்வி தலைமையிலான பொலிஸார் வவுனியா, தோணிக்கல் பகுதியில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது விற்பனைக்காக தயார்ப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 5 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டனர்.*

*இதன்போது குறித்த ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த யுவதியும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட யுவதியை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முதலில் நீங்கள் திருந்துங்கள்

சிறுவர்கள் துன்புறுத்தப்படும் காணொலிகள் சமூக வலைத்தளங்களில்பகிரப்படுவதைத்தொடர்ந்துஅவர்களின் பெற்றோர்கள்அல்லது சிறுவர்களைத்தாக்கியவர்கள்கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் குறித்த செய்திகள் இப்போது அடிக்கடி வருகின்றன. அதேபோன்று மாணவர்கள் தாக்கப்பட்டு அதற்காக ஆசிரியர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்பாகவும் அடிக்கடி செய்திகள் வருகின்றன.

சிறுவர் உரிமைகள், சிறுவர் நலன்நோன்பு தொடர்பாக இன்றைய காலகட்டத்தில் வளர்ச்சியடைந்திருக்கும் கருத்தியல்களுக்கு ஏற்ப குழந்தைகள், சிறுவர்கள் தாக்கப்படுவது தண்டனைக்குரிய குற்றமாகியிருக்கிறது. இதனைசட்டங்களின்மூலம்இன்னும்கடுமையாக்கப்போவதாக தற்போதைய ஆளும் தரப்பினர் பேசி வருகின்றனர்.

சிறுவர்கள் மீது மட்டுமல்ல எவர் மீதாயினும் வன்முறை தவிர்க்கப்படவேண்டிய, தடுக்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், சட்டங்களால் மட்டுமே அதனை முழுமையாக மக்களிடம் நடைமுறைப்படுத்திவிட முடியாது. அடிப்படையில் வன்முறையை அதிலும் அசிங்கமாக ஆடைகளைக் களைவது, பொதுச் சொத்துக்கள் மற்றும் வாகனங்களை எரிப்பது, நாட்டின் தலைவர்களையே தாக்குவது என்று மோசமான வன்முறையைத் தமது ஆழ்மனதில் கொண்டுள்ள ஒரு சமூகத்தில், போரை ஊக்குவித்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களைப் பாதுகாத்து அவர்களை நாட்டின் போற்றத்தக்க வீரர்களாக உயர்த்திப் பிடிக்கும் சமூகத்தில் இருந்து வந்தவர்களிடம் சிறுவர்கள் மீது வன்முறைகூடாது என்று சட்டத்தைப் பாயவிடுவது வேடிக்கையாக இருக்கின்றது.

வன்முறை வேண்டாம் என்றால் அது எந்த வடிவத்திலானதாக இருந்தாலும் நிறுத்தப்படவேண்டும். இங்கு ஆளும் தரப்புக்கு எதிரான போராட்டங்களையும் எதிர்ப்புக்களையும் அடக்குவதற்கு முழுமையாக வன்முறையைக் கையில் எடுக்கும் ஆளும் தரப்புக்கள் பொதுமக்கள் வன்முறையில் ஈடுபடக்கூடாது, தமது பிள்ளைகளைத் தாக்கக்கூடாது என்று சட்டத்தைக் காட்டி மிரட்டினால் அதனை அவர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டு செல்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் தமக்குள் மேலுள்ளவர்களையும் அதிகாரத்தில் உள்ளவர்களையும் பார்த்துப் பழகி அதனையே தமது அதிகாரமாகவும் பயன்படுத்தப் பழகிக்கொண்டவர்கள். எனவே அவர்களைத் திருத்த வேண்டும் என்றால் முதலில் ஆட்சியாளர்கள் தமது வன்முறைகளை நிறுத்தவேண்டும். பின்னர் மக்களுக்கு சிறுவர்கள் மீதான வன்முறையை தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். அதன் பின்னரே அவர்களை சட்டத்தின்படி தண்டிப்பதற்கு அரசுசார் நிறுவனங்களுக்கு தார்மீக உரிமை வரும்.

அதிலும் குறிப்பாக, வன்முறையை, சட்டங்களுக்கும் சர்வதேசவிதிமுறைகளுக்கும்மாறானசித்திரவதைகளைத் தனது விசாரணை வழிமுறையாகக் கொண்டிருக்கும் இலங்கைக் காவல்துறையினர் தமது குழந்தைகளைத் தாக்கினார்கள் என்பதற்காக பெற்றோரை சட்டத்தின் முன் நிறுத்துவது வேடிக்கையிலும் வேடிக்கை. இரவில் மாணவியைக் கைது செய்து, அவரது தாயரைக் கைது செய்துதரதரவென இழுத்துச்செல்லும்காவல்துறையினர், அது பொதுவெளியில் பகிரப்படும் எனத் தெரிந்தும் வன்முறையை அரங்கேற்றும் காவல்துறையினர் சிறுவர்களைத் தண்டித்தார்கள் என்பதற்காகப் பெற்றோரையும் ஆசிரியர்களையும் நீதிமன்றங்களில் நிறுத்துவது காலப்பிழை அன்றி வேறென்ன.

ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கமும் சட்டம் ஒழுங்குக் காவலர்களும் முதலில் சட்டத்தையும் மனித உரிமைகளையும் மதித்து நடந்தால் இந்தச் சமூகமும் அதனை மதித்து நடக்கக் கற்றுக்கொள்ளும். எனவே முதலில் நீங்கள் திருந்துங்கள், அவர்கள் தாங்களாகவே திருந்திக்கொள்வார்கள்.



# அருகி வரும் அறம்

ராஜன் குறை கிருஷ்ணன



இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன் - அதாவது 1776இல் அமெரிக்க குடியரசு உருவானதும், 1789இல் பிரெஞ்சு புரட்சி நிகழ்ந்ததும் 'நவீன பொது மானுட வரலாறு' அல்லது 'உலக வரலாறு' என்ற ஒரு சிந்தனைக்கு வித்திட்டன.

வெகு காலமாக பல்வேறு வடிவங்களில், மொழிகளில் இயங்கிய மானுட அறவியல் சிந்தனைக்குச் 'சுதந்திரம்', 'சமத்துவம்', 'சகோதரத்துவம்' என்ற முழக்கம் புதிய வடிவத்தைத் தந்தது. இதன் பின் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நவீன தேசிய அரசுகள் திட்டவட்டமாக உருவானது பெரும் வரலாற்று நகர்வாகக் கொண்டாடப்பட்டது. குறிப்பாக பல்வேறு நகர அரசுகளாக, சிற்றரசுகளாக இருந்த இத்தாலியும், ஜெர்மனியும் தேசிய அரசுகளாக உருவானது உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

தேசிய அரசுகளின் உருவாக்கம் என்பது பழைய மன்னராட்சி வடிவத்தை மாற்றி, சட்டத்தின் ஆட்சி என்ற குடியரசு, மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி என்ற மக்களாட்சி ஆகியவற்றை உருவாக்கி, மக்களாட்சி குடியரசுகள் மலர வகை செய்தது. இதெல்லாம் மானுட தார்மீக எழுச்சியில் மிகப் பெரிய முன்னேற்றம் என்று நினைக்கும்போதே, தேசிய அரசுகளின் ஆதாரமாக விளங்கிய முதலீட்டிய குவிப்புகள் காரணமாக அவற்றினிடையே கடும் போட்டா போட்டியும், மோதல்களும் தோன்றின.

மானுட த்தின் தார்மீக மறுமலர்ச்சிக்கும், அதனுடன் இணைந்தே பயணித்த முதலீட்டிய குவிப்பிற்கும் அடிப்படையில் தீவிர முரண்பாடு இருந்தது. தார்மீக, அற உணர்வு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று இலட்சியங்களை முழங்கினால் முதலீட்டியம் அமைதியாக அடிமைகளின் உழைப்புச் சுரண்டல், காலனியாதிக்கக் கொள்ளைகள், தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டல், கண்மூடித்தனமான நுகர்வுப் பெருக்கம் (உதாரணம்: டீ, காபி, சக்கரை, புகையிலை, அபின்) ஆகியவற்றைச் செயல்படுத்தியது.

இவற்றின் காரணமாக இருபதாம் நூற்றாண்டு இரண்டு முரண்பாடுகளின் களமானது. ஒருபுறம் தேசிய அரசுகளின் விரிவாக்க பேராசைகளால் உருவான போர்கள். மற்றொன்று அரசு மைய பொதுவுடமையா, சுதந்திரவாத தனியுடைமையா என்ற சித்தாந்த போர்.

உலகின் பல பகுதிகளிலும் காலனிய ஆட்சியை நிறுவியிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான இரண்டு உலகப் போர்கள் வரலாறு காணாத அழிவினைத் தோற்றுவித்தன. முதலில் 1914-1919 ஆகிய ஐந்தாண்டுகள் நடந்த முதல் உலகப் போரில், தரையில் ராணுவங்கள் மோதும் டிரெஞ்ச் வார் என்பது முக்கியமாக இருந்தது என்றால், 1939-1945 ஆண்டுகளில் நடந்த போரில் வான்வழித் தாக்குதல், குடிமக்களைக் குண்டு வீசி தாக்குதல், குடியிருப்புகளை அழித்தல் ஆகியவை முதன்மை பெற்றன. குறிப்பாக 'ஹோலகாஸ்ட்' என்ற ஹிட்லரின் யூத இன அழிப்பும், ஹிரோஷிமா - நாகாசாகி நகரங்களின் மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டுகள் உருவாக்கிய கோரப்பேரழிவும் மானுட நாகரிகம் மேன்மையுறுகிறது என்ற பாவனையை முற்றிலும் தகர்த்து அழித்தன என்றால் மிகையாகாது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் காலனி ஆதிக்கத்திலிருந்து உலக நாடுகள் பலவும் விடுதலை பெற்றதும், இந்தியாவில் காந்தி உருவாக்கிய ஆன்மிக மறுமலர்ச்சியால் உருவான அகிம்சை, சகவாழ்வு குறித்த நம்பிக்கைகளும், சீனாவில் மாவோவின் குடியானவப் புரட்சியால் உருவான பொதுவுடமை அரசும், ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும், வேகமெடுத்த அறிவியல் - தொழில்நுட்ப வளர்ச்சிகளும் மீண்டும் ஓரளவு நம்பிக்கை துளிர்க்க காரணமாயிருந்தன. அதாவது, மானுடத்தால் தன்னுடைய அறிவாற்றலையும், அறவுணர்வையும் பிணைத்து பண்பும், பகிர்தலும் கொண்ட, அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த மானுட வாழ்வை உலகளாவிய அளவில் உருவாக்க முடியும் என்ற எண்ணம் பலருக்கு ஏற்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு முன்னெடுப்புகளை பரிசீலித்தால் இந்த உண்மை விளங்கும்.

இருப்பினும், 1950 முதல் 1990 வரையிலான இந்தக் காலகட்டம் அமெரிக்க, ரஷ்ய வல்லரசுகளுக்கு இடையிலான பனிப்போரின் விளைவால் பல்வேறு அநீதிகளும், வன்முறையும் அரங்கேறக் கண்டது. அதில் பிரதானமானது வியட்நாமை வடக்கு தெற்காக பொதுவுடமை, தனியுடமை சித்தாந்தங்கள் பங்கு போட்டுக்கொள்ள அமெரிக்கா நேரடியாக ராணுவத்தை அனுப்பி ஹோசிமின் தலைமையிலான வடக்கு வியட்நாமின் மீது கொடும் தாக்குதலைத் தொடுத்ததுதான்.

இது 1960களின் இறுதியில் உலகெங்கும் மாணவர் கிளர்ச்சிகளை உருவாக்கியது. முதலீட்டிய குவிப்பு, மொத்தத்துவ அரசு ஆகிய இரண்டு வடிவங்களின் ஆதிக்கத்திற்கு எதிராகவும் மானுட தன்னுணர்வை கிளர்ந்தெழச் செய்ய வேண்டிய தேவையைச் சிந்தனையாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் உணர்ந்தார்கள். இந்த எழுச்சியின் ஒரு நல்விளைவாக தென்னாப்பிரிக்காவில் நிறவெறி அரசு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கே மக்களாட்சி குடியரசு உருவானது.

இந்தச் சூழலின் அடுத்த கட்ட நகர்வாக, சீனா அமெரிக்க முதலீட்டுக்கு வாயில்களைத் திறந்துவிட்டது. மக்களின் குறைந்தபட்ச வாழ்வாதாரத்தை உறுதிசெய்த சீனா, அரசின் மேற்பார்வையில் முதலீட்டிய குவிப்பினையும், உற்பத்தி நுகர்வுப் பெருக்கத்தையும் அனுமதித்தது. அது மெள்ள மெள்ள சீனாவை பொருளாதார வல்லரசாக மாற்றியது. அதேசமயம், ரஷ்யாவின் உள்நாட்டுப் பொருளாதாரம் பெரிதும் சீர்குலைந்ததால் கோர்பசேவ் தலைமையில் கிளாஸ்நாஸ்ட், பெரஸ்தொரய்கா என்று தொடங்கி இறுதியில் பொதுவுடமை அரசு வீழ்ந்து, சோவியத் ஒன்றியத்தின் பல்வேறு பகுதிகள் தனி நாடுகளாயின.

பனிப்போர் முடிந்து உலகம் முழுவதும் சுதந்திரவாத தனியுடமையே (10ஆம் பக்கம் பார்க்க..)

# மற்றைய தலைவர்கள் ஓடுவதற்கு சப்பாத்து தேடியபோது நான் செருப்புக் காலோடு சென்று ஆட்சியைப் பிடித்தேன்

## இப்படிக் கூறுகிறார் ஜனாதிபதி



மற்றைய தலைவர்கள் ஓடுவதற்கு சப்பாத்து தேடிக்கொண்டிருந்த வேளையில் நான் செருப்புக் காலோடு சென்று ஆட்சியைப் பொறுப்பேற்றுக்கொண்டேன் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அரசியலை ஒதுக்கிவிட்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கு ஆதரவளிப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் ருவன்வெல்ல இல்லத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் கூறினார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியுடன், நாட்டின் அரசியலும் வீழ்ச்சியடைந்துள்ளதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, முதன்முறையாக அரசியலில்லாத அரசாங்கம் உருவாக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

தற்போது மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தாலும் நாடு இன்னும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, எனவே அரசியலுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பின்னர் ஜனாதிபதி இந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டதுடன், பெருந்திரளான பிரதேச மக்களும் இதில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொதுக் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு திரும்பும் வழியில் பாதையின் இருமருங்கிலும் கூடியிருந்த மக்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இதேவேளை, ருவன்வெல்லவிலுள்ள தனது கொள்ளுப்பாட்டியின் வளவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சென்றிருந்ததோடு அங்கு சிறிது நேரத்தைக் களித்தார்.

முன்னதாக பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறுகையில் -

வங்குரோத்து அடைந்துவிட்டாதாக அறிவித்திருக்கும் அரசாங்கத்தால் மக்களுக்கு எவ்வாறு இந்தளவு சலுகைகளை வழங்க முடியும் என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். உறுமய, அஸ்வெசும,அரிசி மானியம் வழங்கும் திட்டங்கள் நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருந்தபோது ஏன் செயற்படுத்தப்படவில்லை என்றும் கேட்கிறார்கள்.

அதேபோல், அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ஷரூபாய் சம்பள உயர்வு வழங்கினோம். 2015 இற்குப் பிறகு இவ்வாறான சம்பள உயர்வு வழங்கப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். எனவே, இந்த நிவாரணங்களை அரசாங்கம் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்போகிறது என்ற கேள்வி காணப்பட்டது.

மிகவும் கடினமான சூழ்நிலையில் இருந்த ஒரு நாட்டை நாங்கள் பொறுப்பேற்றோம். ஏனைய தலைவர்கள் ஓடுவதற்கு சப்பாத்து தேடிக்கொண்டிருந்த வேளையில், நான் செருப்புக் காலோடு சென்று ஆட்சியைப் பொறுப்பேற்றேன். அது மட்டுமன்றி, சரியான கொள்கையின்படி செயற்பட்டோம். அதனால் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுத்தோம். இரண்டு வருடங்களில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப மிகவும் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. வரி அதிகரிப்பு இலகுவானதாக இருக்கவில்லை. ஆனால் அது மட்டுமே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒரே வழியாக விளங்கியது.

அடுத்தபடியாக நாட்டில் முதன்முறையாக இலங்கையில் கட்சி அரசியல் இல்லாத அரசாங்கத்தை அமைத்தோம். அதற்குள் சகல கட்சிகளும் அங்கம் வகித்தன. கட்சிப் பிளவுகள் இருக்கவில்லை. திறமை மற்றும் நம்பிக்கையை மாத்திரமே நம்பி செயற்பட்டோம். இல்லையெனில், இந்த ஜனநாயக முறைமையில், ஒரே ஓர் ஆசனம் இருந்த கட்சியிலிருந்து ஜனாதிபதி பதவிக்கு வந்திருக்க முடியாது. எனவே நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு அனைவரிடத்திலும் கோரிக்கை விடுத்திருந்தேன்.

ஒரு சிலர் அதற்கு முன்வரவில்லை. முடிந்தளவில் நான் எல்லோரையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்னோக்கிச் சென்றேன். முதன்முறையாக அரசியல் சாராத அமைச்சரவையொன்று அமைக்கப்பட்டது. கட்சி பேதமின்றி நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். குறுகிய மனப்பான்மை இன்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாம் இன்னும் மீளவில்லை. எரிபொருளும் உரமும் கிடைத்தாலும் நல்ல விளைச்சல் கிடைத்தாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னும் நாம் முழுமையாக விடுபடவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள் நாம் வங்குரோத்து நிலையில் இருந்து மீளக்கூடிய சாத்தியம் உள்ளது. ஆனால் அது போதாது. நமது நாட்டில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். எனவே, எமது பொருளாதார இலக்குகளின்படி சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமாயின், திட்டமிட்டபடி செயற்பட வேண்டும். எனவே, நாம் அனைவரும் இந்த நேரத்தில் அரசியலை ஒதுக்கி வைத்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்து செய்தது போல், நாம் அனைவரும் ஒன்றாக இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

அரசியலை தனியாக வைத்துவிட்டு நாட்டிற்காக ஒன்றுபடுவோம். பழைய அரசியல் முறைமையால் நாட்டை முன்னேற்ற முடியாது. இந்த நாட்டின் இளைஞர்களுக்கான எதிர்காலத்தை நாம் உருவாக்க வேண்டும். எனவே, அரசியலுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பி, முன்நோக்கிச் செல்ல அனைவரும் முன்வாருங்கள்.- என ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய இனமாகிய தமிழர்கள் அடக்கப்பட்டால் நாட்டில் ஏனைய இனங்களின் நிம்மதி போகும்

## நாடாளுமன்றில் சிறீதரன் காட்டம்

தேசிய இனமான தமிழினம் அச்சுறுத்தப்பட்டு எப்பொழுதும் நிலம் பறிக்கப்பட்டு இராணுவ பிடிக்குள் வைக்கப்பட்டு அடக்கப்படுகின்ற போது அவர்களுடைய நிம்மதியற்ற வாழ்வு என்பது ஏனைய இனத்தையும் இந்த மண்ணிலே நிம்மதியாக வாழ விடாது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர் -

காணிகளைப் பறித்தல், தமிழர்களை கைது செய்தலூடாக அச்சுறுத்துதல் அங்கே வாழுகின்ற மக்களினுடைய எண்ணங்களை சிதைக்கின்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரல்களை வைத்திருப்பதை தான் எங்களால் பார்க்க முடிகின்றது.

இந்த மோசமான நிலமைகள் மாற்றப்பட வேண்டும். நாட்டினுடைய வளர்ச்சியும் முன்னேற்றமும் ஒவ்வொரு தனிமனித செயல்பாடுகளிலும் அடங்கியுள்ளது. - என்றார். (05)

# புங்குடுதீவு கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு





யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குப்பட்ட புங்குடுதீவு மடத்துவெளி வயலூர் முருகன் ஆலய கிணற்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிழந்தவர் புங்குடுதீவு மடத்துவெளி எட்டாம் வட்டாரத்தை சேர்ந்த 27 வயதுடைய சிவகுகானந்தன் சிந்துயா என்பவராவார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக வைகக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தண்டனை பெற்றும் திருந்தாத காதலர்கள் யாழில் மீளக் கைது

*சிறுவயது காதலர்கள் நீதிமன்றால் தண்டிக்கப்பட்ட பின்னரும், மீண்டும் வீட்டை விட்டு வெளியேறி பிறிதொரு இடத்தில் தங்கியிருந்த வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 18 வயது இளைஞனும், 16 வயது சிறுமியும் காதலித்து வந்த நிலையில், ஆறு மாதங்களுக்கு முன்னர் வீட்டை விட்டு வெளியேறி பிறிதொரு இடத்தில் தங்கியிருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.*

*நீதிமன்ற விசாரணைகளையடுத்து, இளைஞனுக்கு 3 மாதகால சிறைத்தண்டனை விதித்த நீதிமன்றம், சிறுமியை சீர்திருத்த பள்ளியில் சேர்க்குமாறு கட்டளையிட்டது.*

*தண்டனைக் காலம் நிறைவடைந்து, தமது வீடுகளுக்கு திரும்பிய இவ்விருவரும், மீண்டும் தமது வீட்டை விட்டு வெளியேறி, யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் தங்கியிருந்துள்ளனர்.*

*இது தொடர்பாக தகவலறிந்த பொலிஸார் இளைஞனையும் சிறுமியையும் மீண்டும் கைது செய்து, இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.*

*(05)*




## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களின் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன முன்வைத்த வாய்மொழி மூலமான கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்களின் ஆட்சேர்ப்புத் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வழக்கின் தாமதத்தினால் ஆசிரயிர் நிறயனங்கள் தாமதமானதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்களைஉள்வாங்குவதற்காக பரீட்சைகள்நடாத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும்இரண்டுவாரங்களுக்குள் அந்நடவடிக்கைளை நிறைவு செய்யலாம் என்றார்.

தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை உள்வாங்குதல் தொடர்பாக அமைச்சர தொடர்ந்தும் குறிப்பிடுகையில், பட்டதாரி ஆசிரியர்களின் ஆட்சேர்ப்புத் தொடர்பாகக்காணப்படும்வழக்கின் தாமதத்தினால் தேசிய பாடசாலை ஆசிரியர் நியமனம் வழங்கலும் தாமதமாவதாகவும், பரீட்சைகளை நடாத்தும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு 15 மாதங்கள் கடந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன் ஆசிரியர் சேவை ஒழுங்குவிதிகளில் பட்டதாரிகளை உள்வாங்கும் போது பரீட்சையொன்றை நடாத்தி அதன் புள்ளிகளின் படி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நாம்1985இல்கல்விக்கல்லூரிகளை ஆரம்பித்தோம். தற்போது 19 கல்விக் கல்லூரிகள் காணப்படுகின்றன.

இவற்றுக்கு உயர்தரப் பரீட்சை ணு புள்ளி அடிப்படையில் உள்வாங்கப்படுகின்றனர். இவ் 19 கல்விக் கல்லூரிகளையும் இணைத்து, இலங்கைக் கல்விப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான சட்டமூலம்தற்போதுதயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

தரமான ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குக் கிடைக்கும் வரை கல்வியைத் தயாரிக்க முடியாது. இதனை சுயாதீனமான என்ற கதையுடன் இந்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## தமிழ் பொது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுக்குழுவினர்நேற்றுகொழும்பில் உள்ள சம்பந்தனின் இல்லத்தில் சந்தித்து உரையாடி இருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் சுமந்திரன் தெரிவித்ததாவது:

நடைபெற இருக்கின்ற தேசிய தேர்தல்கள் சம்பந்தமாக அறிந்து கொள்வதுதான் அவர்களின் பிரதானமான நோக்கமாக இருந்தது. அத்தோடு தமிழ் மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் அவர்கள் விரிவாகக் கலந்துரையாடினார்கள்.

தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அவற்றை பிற்போட முடியாது. ஏலவே உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளன. அதுபோன்று தேசிய தேர்தல்களையும் பிற்போட முடியாது. அதற்கு இடமளிக்கவும் முடியாது.

மக்கள் ஆணையில்லாத ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றம் தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்க முடியாது. ஆகவே தேர்தல்கள்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



## தமிழ் பொது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமதமின்றி உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை சம்பந்தன் வெளிப்படுத்தினார்.

அத்தோடு, தமிழ் பொது வேட்பாளர் சம்பந்தமாக தாங்கள் கேள்விப்பட்டதாகவும் அதுபற்றிய விடயங்கள் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் கேள்வி எழுப்பினார்கள். அப்போது சம்பந்தன், தமிழ் பொதுவேட்பாளர் பயனற்ற முயற்சி என்று குறிப்பிட்டதோடு ஒற்றுமையாக ஜனாதிபதி தேர்தலில் தீர்மானிக்கின்றவர்களாக தமிழ் மக்கள் இருக்க வேண்டும் என்பது தான் தன்னுடைய நிலைப்பாடு என்றும் கூறினார்.

## மோடியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் திறமையான ஆட்சி, நிர்வாகத்தின் பயனாகவே பிரமதர் மோடிக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

நாடு என்றவகையில் இலங் கைக்கும் இந்தியாவுக்கும் இடை யிலான மிகவும் நெருக்கமான நட்பு இருக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. பிரதமர் மோடி இந்தியாவில் பல பிராந்தியங்களில் மிகவும் சிறந்த தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து அதிகமான பிராந்தியங்களை வெற்றிகொள்ள முடியுமாகி இருக்கிறார். தொடர்ந்து மூன்றாவது தடவையாக தேர்தலில் வெற்றிபெற்று, பிரதமராக தெரிவாவது இலகுவான விடயமல்ல. அவரின் செயற்பாட்டின் மூலம் நாங்கள் படிப்பினைபெற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

விசேடமாக இந்தியா இற்றைக்கு பல தசாப்தங்களுக்கு முன்னர் பொருளாதார வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார சீர்திருத்தங்களை செயல்படுத்தி, அனைவரையும் உள்ளடக்கிய, பொருளாதாரநலன் அனைவருக்கும் சென்றடையும் பொருளாதார வளர்ச்சி மூலம் முன்னோக்கிச் செல்லும்போது பொருளாதார வளர்ச்சியை சந்தித்து வருகின்றன. கோவிட் நிலைமைக்குப் பின்னரும்கூட, பெரும் பொருளாதார வளர்ச்சியை அவரால் செயல்படுத்த முடிந்தது .

பொருளாதாரப் பயன்கள் அனை வராலும் பகிர்ந்து கொள்ளப்ப டும்போது, பொதுமக்களின் நம்பிக் கையும் அதிகரிக்கும். இந்த பயன் கள் ஒரு பிரிவினருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படும்போது, பின்ன டைவு ஏற்படும். நமது நாடு வங்குரோத்து நிலையை அடைந்த நேரத்தில், ஒரு நாடாக இந்தியாதான் அதிக உதவிகளையும், கடன் உதவிகளையும் வழங்கியது. இதற்கு நன்றி தெரிவித்துக் கொள் வதுடன் வெற்றி பெற்ற பிரதமர் மோடிக்கு வாழ்த்துக்களை தெரிவித் துக்கொள்கிறோம் என்றார்.

## காலநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலநிலை மாற்றம் குறித்து நாம் கவனம் செலுத்தும் போது, பரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடைவதற்கான நம்பிக்கையை அது நமக்குத் தருகிறது என்றே கூற வேண்டும்.

உலக வெப்பநிலை நாம் எதிர்பார்த்ததை விட ஏற்கனவே உயர்ந்துள்ளது. மேலும், சில அபிவிருத்தியடைந்த நாடுகள் காலநிலை மாற்றத்திற்கு எதிராக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. அந்த இலக்கை அடைய இந்தியா, சீனா, இந்தோனேஷியா போன்ற நாடுகள் கால அவகாசம் தேவை என்று கூறியுள்ளன. மேலும் பெற்றோலிய உற்பத்தி செய்யும் நாடுகளும் உள்ளன.

இவற்றுக்கு மத்தியில் இலங்கை போன்ற சிறிய நாடுகள் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் சிக்கித் தவிக்கின்றன. அதற்கு நாம் இப்போது புதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எனவே, சுற்றுச்சூழல் அமைச்சு நிறுவப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுடன் நின்றுவிட முடியாது. இந்த இலக்குகளை அடைய, பல புதிய திட்டங்களை செயல்படுத்த வேண்டும். அதற்கான பணியை ஏற்கனவே தொடங்கிவிட்டோம். அதன் முதல் பணி புதிய சட்ட கட்டமைப்பை உருவாக்குவதாகும். நாங்கள் ஏற்கனவே முதல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம்.

பொருளாதார பரிமாற்ற சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பொருளாதார மாற்றத்திற்கான தேசியக் கொள்கை (அ) ஐஐ இல் 2050க்குள் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு இலக்கை அடைவது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, தேசிய கொள்கையில் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு என்ற இலக்கை உள்ளடக்கிய ஆசியாவின் முதல் நாடாக நாம் மாறியுள்ளோம்.

நாட்டின் பொருளாதார இலக்கு களை அடையும் போது இந்த இலக்கை அடைய வேண்டும். 2050 வரை காத்திருக்காமல் 2040க்குள் இந்த இலக்கை அடைவதில் கவனம் செலுத்தியுள்ளோம். அதற்கேற்ப நாம் செயற்பட்டு வருகின்றோம். இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அது தேசிய கொள்கையாக மாறும். அன்றிலிருந்து ஒவ்வொரு நிறுவனமும் அதற்கேற்ப செயல்பட வேண்டும், அரசு சாரா பிரிவுகளும் அதன்படி செயல்பட வேண்டும்.

அத்துடன், மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். சுற்றுச்சூழல் சட்டம் 80களில் தயாரிக்கப்பட்டது. இப்போது நிலைமை அதனை விட மாறிவிட்டது. எதிர்காலத்தில் அந்தத் திருத்தங்களைச் முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

குறிப்பாக, காலநிலை மாற்றச் சட்டம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான மையத்தை நிறுவும் சட்டத்தையும் முன்வைக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த இரண்டு வரைவுகளும் அமுல்படுத்தப்படும் போது, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான அடிப்படை சட்டக் கட்டமைப்பை இலங்கை கொண்டிருக்கும்.

பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பாக நிதி அமைச்சில் தனிப் பிரிவை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். பசுமைப் பொருளாதாரத்திற்கான திட்டங்களுக்கான நிதி பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் அந்த பிரிவு மூலம் நிறைவேற்றப்படும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த முழுமையான பொறிமுறையை நாம் எதிர்பார்த்துள்ளோம். மேலும், இந்த சுற்றாடல் கொள்கையின்படி தற்போது தொடங்கப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்த அறிவுறுத்தியுள்ளோம். இதன் மூலம் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துடன் சுற்றுச்சூழல் கொள்கைகளும் கிராமத்திற்கு செல்கிறது. எனவே இந்த வேலைத்திட்டத்தை தேசிய அளவில் செயல்படுத்துவோம்.

காலநிலை மாற்றத்தினால் முழு உலகமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இவ்வாறான வேளையில் இலங்கை போன்ற ஒரு நாடு அமைதியாக இருக்க முடியாது. எனவே, காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடுகள் மற்றும் பிற சர்வதேச அரங்குகளில் சுற்றாடலுக்காக முன்வந்து செயற்படுமாறு வெளியுறவு அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கும் நான் தெரிவித்துள்ளேன்.

இங்கு ஒரு முக்கிய விடயமாக காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக் கழகத்தை நிறுவ நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அது குறித்து பல நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளதுடன், இந்தப் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்காக கொத்மலை பிரதேசத்தில் 600 ஏக்கர் காணியைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.

எதிர்வரும் மாதத்தில் அது குறித்த சட்ட மூல வரைவுத் தயாரிப்புப் பணிகள் நிறைவடைந்த பின்னர், சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகளுடன் பேச்சு நடத்தப்படும். அந்தப் பணிகள் முடிந்ததும், அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன் அதனை சட்டப்பூர்வமாக்க எதிர்பார்க்கின்றோம்.

காலநிலை மாற்றத்திற்கு முகங்கொடுப்பது தொடர்பான சர்வதேச அளவிலான ஆராய்ச்சிக்காக இந்தப் பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம். மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளத் தேவையான நிதியைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது.

இதற்கு நிதி இல்லாததால் மூன்றாம் உலக நாடுகள் அவர்களுக்கு நிதியைப் பெற்றுத் தறுமாறு கேட்கின்றன. எல்லா நாடுகளும் அந்த கோரிக்கை முன்வைப்பதும் பொருத்தமற்றது. இன்று பொருளாதார ரீதியில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் இலங்கை கூட அவ்வாறு நிதி கேட்பதில்லை. ஆனால் ஆபிரிக்காவில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாடுகளுக்கு தற்போது திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள கடன்களை தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

அதற்காக பல நாடுகளுடன் நாம் இணைந்து இருக்கிறோம். மேலும், மேற்கத்திய நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளிடம் இருந்து இந்த விடயத்திற்காக எங்களுக்கு பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட நிதி கிடைக்கவில்லை. ஆனால் அமெரிக்காவும் ஐரோப்பாவும் இந்த ஆண்டு உக்ரேன் போருக்குப் பயன்படுத்திய பணத்தைக் காலநிலை மாற்றத்துக்குஈடுகொடுக்க வழங்கியிருந்தால், அந்தப் பணம் இரண்டு ஆண்டுகளுக்குப் போதுமானதாக இருந்திருக்கும். ரஷ்யா செலவழித்த பணம் இன்னும் கணக்கிடப்படவில்லை. மேலும், காஸா போருக்குப் பயன்படுத்தப்பட்ட பணமும், அதற்காக அனுப்பப்பட்ட ஆயுதங்களின் செலவையும் இந்த நடவடிக்கைகளுக்கு வழங்கியிருந்தால், உலகையே மாற்ற முடியும். ஆனால் இந்தப் பணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, வெப்பமண்டலப் பிரதேசம் என்ற வகையில் எமக்குத் தேவையான பணத்தை நாமே தேடிக்கொள்ள வேண்டும் என இலங்கை முன்மொழிந்துள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட ஆபிரிக்க நாடுகளுக்கு நிவாரணம் வழங்குமாறு உலகின் வளர்ந்த நாடுகளை வற்புறுத்தும் அதேவேளை, எமக்குத் தேவையான பணத்தை நாமே தேடிக்கொள்வோம். குறிப்பாக சுற்றுச்சூழல் துறையில் கார்பன் கிரெடிட்டைப் பெற பல நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே நமது நாடுகளில் கார்பன் கிரெடிட் பெறக்கூடிய திட்டங்களை தொடங்க வேண்டும். இதற்காக வெப்பமண்டலப் பகுதியை ஒதுக்கியுள்ளோம். அந்தந்த நாடுகள் அதற்காக செயற்பட்டால், எமக்குத் தேவையான தொகையில் ஒரு பகுதியைப் பெறும் திறன் நமக்கு உள்ளது. உலகின் காலநிலை மாற்றத்தின் ஒரு பகுதியை அதற்கேற்ப கட்டுப்படுத்த முடியும்.

பிரேசிலின் அமேசான் நதிப் பள்ளத்தாக்கு மற்றும் அதைச் சுற்றியுள்ள பெரும் காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், இதன் போது இந்து சமுத்திரத்தின் வகிபாகம் குறித்தும் நாம் கலந்துரையாடி வருகின்றோம். அதன்படி, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழலைக் கையாள்வதில் இலங்கையின் வகிபாகம் பாரம்பரியத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை. நாம் இன்னும் முன்னோக்கிச் சென்று பொருளாதாரக் கொள்கை மற்றும் வெளியுறவுக் கொள்கையிலும் இதனைச் சேர்க்க வேண்டும் என்றார்

## சிறுவனைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவனின் தாய், சித்தப்பா, பெண்கள் இருவர் உள்ளிட்ட ஐவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான குகுல் சமிந்த எனும் நபரும் மற்றுமொரு சந்தேகநபரும் இன்று அதிகாலை புல்மோட்டை அரிசிமலை பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

சிறுவனின் தாயை உளநல வைத்தியர் ஒருவரிடம் அனுப்பி அறிக்கை பெற்றுக்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறுமியை அனுராதபுரம் நன்னடத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு நீதவான் மேலும் உத்தரவிட்டார்.

இதேவேளை, சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் அல்லது அவர்களுக்கு தீங்கு விளைவிப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கி றோம். ஒரு சிறுவர் தவறாக நடத்தப்படுவதைக் காட்டும் ஒரு துன்பகரமான காணொளியால் நாம் மிகவும் கலக்கமடைந்துள்ளோம்.

மேலும் குற்றவாளிகள் மீது விரைவான மற்றும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு குறித்த அதிகாரிகளை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

சிறுவர் துஷ்பிரயோகத்தின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும் அனைத்து சமூகங் களிலும் எளிதில் அணுகக்கூடிய மற்றும் விரைவாக பதிலளிக்கக்கூடிய விரிவான ஆதரவு வழிமுறைகளை நிறுவுவதற்கும் நாம் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் என்று ஹாஸ்டாக் ஜெனரேசன் என்ற அமைப்புத் தெரிவித்துள்ளது.

## சூற்றுச்சூழலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் வெள்ளம் ஏற்பட்டது.

இவ்வருட உலக சுற்றாடல் தினத் தில் இலங்கையில் வனப் பகுதியை 32 வீதம் வரை அதிகரிப்பதற்கான அடிப்படை வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அனைத்து விடயங்களையும் சட்டத்தினால் மாத்திரம் செய்ய முடியாது. அதற்கு மனப்பாங்கு ரீதியில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

பசுமை நகரத் திட்டம் எதிர்காலத்தில் செயல்படுத்தப்படும். மேலும், இந்த ஆண்டு உலக சுற்றாடல் தினத்தையொட்டி, அனைத்து அரச நிறுவனங்களும் இணைந்து 10 இலட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளன' என்றார்.

## கொரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

இலங்கையில் சட்ட வைத்தியத் துறை மற்றும் தோற்று நோய் கட்டுப்பாட்டு நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் அந்த அதிகாரிகள் சபாநாயருக்கு விளக்கமளித்தனர்.

இது அறிவுப் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டம் ஆகும் என கொரிய சட்ட வைத்திய ஆலோசனை மற்றும்

தொடர்ச்சி மறுபக்கம்...



# அருகி வரும்.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

செல்நெறியாகிவிட்டதாகக் கருதப்பட்டது. மானுட வரலாற்றுப் பயணத்தின் இறுதி இலக்கே எட்டப்பட்டதாக ஃபிரான்சிஸ் ஃபூகயாமா நூல் எழுதினார். இடதுசாரி தத்துவவாதி அண்டோனியோ நெக்ரி, தேசிய அரசுகளின் காலம் முடிந்துவிட்டது என்றும் உலகப் பேரரசு உருவாகிவருவதாகவும், அது தாற்காலிமாக அமெரிக்காவால் தலைமையேற்று நடத்தப்பட்டாலும், உலகெங்கும் மக்கள்திரள் வடிவங்கள் பேரரசு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுப் புத்துலகை உருவாக்கப் போராடும் என்றெல்லாம் சிந்தனை செய்தார்.

கணினி யுகத்தின் எழுச்சி, வோர்ல்ட் வைட் வெப் என்ற உலகளாவிய தகவல் வலைப்பின்னல் இவ்வாறான புதிய கோளவியல் சிந்தனைக்கு உரமிட்டது.

இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் கால்பாகம் நிறைவுறும் இந்த நேரத்தில் இந்த உலகப் பொதுமை கணிப்புகளெல்லாம் முற்றிலும் பொய்த்துவிட்டன என்றுதான் கூற வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் தொடர்ச்சியாக தேசிய அரசுகளிடையேயான வல்லாதிக்கப் போட்டி மீண்டும் கூர்மையடைந்துள்ளது. என்ன வித்தியாசமென்றால் இப்போது அப்பட்டமான சுயநலமே வரலாற்று விசை என்று கூறப்படுவதுதான்.

அறம், தர்மம் போன்ற உணர்வுகளெல்லாம் அநாவசியம் என்ற எண்ணம் மானுடத்தின் ஒட்டுமொத்த அழிவுக்குக் கட்டியம் கூறுகிறது. மானுட அறம் அடைந்துள்ள வீழ்ச்சியினை புரிந்துகொள்ள இரண்டு சர்வதேசப் பிரச்சினைகளை நாம் ஆராய்ந்தால் போதும். ஒன்று ரஷ்ய – உக்ரைன் போர். இரண்டு காஸாவில் இஸ்ரேல் நிகழ்த்தும் இனப்படுகொலை.

இன்றைய உலக அரசியலின் முக்கியமான அம்சம் அணு ஆயுதங்கள் வைத்துள்ள நாட்டின் மீது இராணுவ தாக்குதல் தொடுக்க முடியாது என்பதுதான். சோவியத் ஒன்றியத்திலிருந்து முப்பதாண்டுகளுக்கு முன்னால் உக்ரைன் பிரிந்தபோது, அதில் நிறுவப்பட்டிருந்த அணு ஆயுத ஏவுகணைகளை ரஷ்யா அகற்றி எடுத்துக்கொண்டது.ரஷ்யாவின் அங்கமாகவே இருநூறு ஆண்டுகளாக இருந்துவந்த உக்ரைன் அதனுடன் அணுக்கமான உறவுகொண்ட நாடாகவே இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அதற்கேற்றபடி ரஷ்ய ஆதரவு அரசியல் சக்திகளே உக்ரைனை ஆண்டுவந்தன. நாளாவட்டத்தில் அமெரிக்க –மேற்குலக ஆதரவு சக்திகள் தலையெடுத்தன.

உள்நாட்டு அரசியலில், முரண்களில் வெளிநாட்டு தலையீடு மறைமுகமாகவும், நேரடியாகவும் தொடங்கியது. விளாதிமீர் புடின் ரஷ்யாவின் மக்களால் 'தேர்ந்தெடுக்கப்பட்ட' சர்வாதிகாரியாக நிலைபெற்றவுடன், அவர் உக்ரைன் மேற்குலக நாடுகளின் கைப்பாவையாக மாறுவது, நேட்டோ கூட்டமைப்பின் அங்கமாவது, ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு நல்லதல்ல, அதனை ஏற்க முடியாது என வெளிப்படையாகவே பல முறை கூறினார். ஆனாலும் மேற்கத்திய அரசுகள் ரஷ்யாவைத் தனிமைப்படுத்த, பலவீனப்படுத்த விரும்பின.

முதலில் ரஷ்யா உக்ரைனின் சில பகுதிகளை 2014ஆம் ஆண்டு கைப்பற்றியது. அதன் பின்னரும், உக்ரைன் மேற்கு நாடுகள் பக்கம் சாய்ந்ததால் இரண்டாண்டுகளுக்கு முன் நேரடியாகவே உக்ரைன் மீது போர் தொடுத்தது. புடினை சர்வாதிகாரி, ஆக்கிரமிப்பாளர் என்று மேற்கத்திய நாடுகள் கண்டித்தன. ஆனால், சீனா புடினுக்கு ஆதரவாக நின்றது. ரஷ்யாவைத் தாக்கினால் அணு ஆயுதப் போர் தொடங்கும் என்பதால் மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு பெரிய அளவில் ஆயதங்களைத் தருகின்றன.

ரஷ்யாவால் பெருத்த சேதமின்றி உக்ரைனைக் கைப்பற்ற முடியாது. உக்ரைனாலும் ரஷ்யாவை முற்றிலும் முறியடிக்க முடியாது. இந்த நிலையில் போர் தொடர்ந்து நடந்துவருகிறது. இருபுறமும் தாக்குதல்கள் தொடர்கின்றன. உயிர்ச்சேதம், பொருட்சேதமும் தொடர்கிறது.

ரஷ்யாவின் மீது பொருளாதரத் தடைகள் விதிக்கப்பட்டன. ஆனால், சீனாவின் உதவியுடன் ரஷ்யா அதனை சமாளித்துவிட்டது. சீனா மட்டுமன்றி, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இந்த நெருக்கடியில் ரஷ்யாவிடமிருந்து மலிவு விலையில் எண்ணெய் வாங்கலாம் என்றுதான் நினைக்கின்றனவே தவிர, ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து அதனைத் தனிமைப்படுத்த வேண்டும் என நினைப்பதில்லை. பிற அணு ஆயுத நாடுகளான வட கொரியா, ஈரான் ஆகியவையும் ரஷ்யா – சீனா அணியில்தான் உள்ளன.இவ்வளவு தூரம் மானுட சிந்தனை வளம்பெற்ற பிறகும் பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் சாத்தியமாக இல்லை என்பதுதான் சோகம். உலகம் தன் கண் எதிரிலேயே மீண்டும் உலகப் போரை நோக்கிச் செல்வதைத் தடுக்க முடியாமல்தான் உலகின் குடிமைச் சமூகம் இருக்கிறது.

**காஸா இனப் படுகொலை**

ஹிட்லர் யூதர்களை இனப்படுகொலை செய்ததால் யூதர்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கின இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள். அது யூதர்களுக்கு கடவுளால் வாக்களிக்கப்பட்டதாக நம்பப்படும் பாலஸ்தீனத்தில் உருவானது. அந்த தொன்ம வரலாற்றுக்கும், சமகாலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் அங்கே பாலஸ்தீனியர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவந்தார்கள். புதிதாக உருவான இஸ்ரேல் பாலஸ்தீனியர்களுடன் இணக்கமான உறவை மேற்கொள்ளவில்லை. திடீரென தங்கள் நிலத்தில் வந்து குடியேறும் யூதர்களைப் பாலஸ்தீனியர்களும் விரும்பியிருக்க முடியாது.

அவர்களிடையே நல்லுறவை உருவாக்கும் எந்தச் சக்தியும், ஆற்றலும் மானுட சமூகத்திற்கு இருக்கவில்லை. இப்படிச் செயற்கையாக இஸ்ரேல் எந்த நாட்டை உருவாக்குவதை காந்தி உள்பட உலகின் அறவுணர்வாளர்கள் பலரும் ஏற்கவில்லை. ஆனால், மேற்கத்திய ஏகாதிபத்திய மனப்போக்கு யார் பேச்சைத்தான் கேட்கும்.

எழுபத்தைந்து ஆண்டுகளாக பல போர்கள், போராட்டங்கள், பேச்சு வார்த்தைகள், உடன்பாடுகள் எல்லாவற்றிற்கும் பிறகும் இஸ்ரேல் பாலஸ்தீனியர்களுக்கான சுயாட்சி பிரதேசங்களை அங்கீகரிக்க மறுக்கிறது. யூதர்களும், பாலஸ்தீனியர்களும் சேர்ந்து மொத்தமாகவே ஒன்றரைக் கோடி பேர்தான். ஆனால், அவர்கள் அந்த நிலப்பகுதியைப் பிரித்துக்கொண்டு ஒற்றுமையாக வாழ வகை செய்ய முடியவில்லை என்றால் எத்தனை பல்கலைக்கழங்கள் இருந்தும், ஆயிரக்கணக்கான அறவியல் நூல்கள் இருந்தும் என்ன பயன் என்பதுதான் கேள்வி. அதனால்தான் மேற்கத்திய பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் மாணவர்கள் கொதித்தெழுந்தார்கள். ஆனால், அமெரிக்கா வெட்கமின்றி இஸ்ரேலின் கண்மூடித்தனமான இனப்படுகொலையை ஆதரிக்கிறது.

**அது என்ன இனப் படுகொலை?**

காஸா பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் என்ற தீவிரவாத அமைப்பு இஸ்ரேலின் புகுந்து இரக்கமற்ற கொலைகளைச் செய்தது. அதனை நிச்சயம் உலக மக்கள் அனைவரும் கண்டித்தார்கள். அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு தீவிரவாத தாக்குதல் இல்லை என்றார்கள். ஆனால், ஏன் எழுபதாண்டுகளாக அரசியல் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கப்படுகிறது என்பதில்தான் வரலாற்றுப் புதிர் அடங்கியுள்ளது.

அது எதுவானாலும், ஹமாஸ் அமைப்பினர் காஸாவின் மக்கள் அனைவராலும் ஆதரிக்கப்படுபவர்கள் கிடையாது. அந்த அமைப்பினரின் செயல்பாட்டுக்கு காஸாவில் வசிக்கும் இருபது லட்சம் பாலஸ்தீனியர்களையும் கொன்று குவிக்க முடியாது. இஸ்ரேல் அவ்வாறு செய்வதைத்தான் இனப்படுகொலை என்று உலகம் முழுவதும் சிந்தனையாளர்கள், மாணவர்கள் கண்டிக்கிறார்கள். ஆனால், அரசாங்கங்கள் வேடிக்கை பார்க்கின்றன.அரசியல் பிரச்சினைக்கு எப்படி ஹமாஸின் வன்முறை தீர்வில்லையோ, அதேபோலத்தான் இஸ்ரேலின் இனப்படுகொலையும் தீர்வல்ல. ஹிட்லரின் யூத இனப்படுகொலையைக் காரணம் காட்டி உருவாக்கப்பட்ட இஸ்ரேல் இன்று பாலஸ்தீனியர்களை இனப்படுகொலை செய்வதன் மூலம் தன் வரலாற்று நியாயத்தை இழந்து நிற்கிறது. இந்த உண்மையை எடுத்துரைத்து பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆற்றலை உலக நாடுகளின் அரசுகள் இழந்து நிற்கின்றன.

ஏனெனில், எல்லா நாடுகளிலும் ஆளும் வர்க்கத்திற்கு அவர்கள் சுயநலமே பெரிதாக இருக்கிறது. இஸ்ரேலைக் கண்டித்து மேற்குலக நாடுகளைப் பகைத்துக்கொள்ள இந்தியா உள்பட எந்த நாடும் தயாராக இல்லை. ஒப்புக்கு கண்டனங்களை தெரிவிப்பதுதானே தவிர அதில் ஆத்மார்த்தமில்லை. ஈரான், சீனா உள்ளிட்ட நாடுகள் இஸ்ரேலைத் தனிமைப்படுத்தி தாக்குவதற்கான வாய்ப்பினை எதிர்நோக்கியுள்ளன என்று அஞ்ச வேண்டியுள்ளது. பாலஸ்தீனியர்களை அழித்துவிட்டு இஸ்ரேல் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது.

ஒட்டுமொத்தத்தில் உலக வல்லரசுகள் மீண்டும் அணிசேர்க்கையை தொடங்கிவிட்டன. அனைவரும் சேர்ந்து சூழலியல் சீர்கேட்டிலிருந்து ஒட்டுமொத்த மானுட அழிவிலிருந்து காத்துக்கொள்ள இயங்க வேண்டிய நேரத்தில், மீண்டும் ஒரு உலகப் போருக்கு, அநேகமாக அணு ஆயதப் போருக்கு ஒத்திகை பார்க்கிறார்கள் என்றுதான் தோன்றுகிறது.

முதலீட்டிய குவிப்பு, பொருளாதர வளர்ச்சி என்ற மாயையில் சிக்குண்ட உலகை நாடுகளை ஆளும் சக்திகளுக்கும், அறம் தார்மீகம் போன்ற கருத்தாக்கங்களுக்கும் அதிக தொடர்பு இருப்பதாக நம்ப முடியவில்லை. இந்த நிலையில்தான் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அரிய அறவியல் கருத்துக்களை போதிக்க முயல்கிறார்கள். அவர்கள் சொற்களின் வெறுமை அவர்களைச் சுடுகிறது. தத்துவத்தின் ஆன்மா நூலகங்களின் இருப்பகுதிகளில் சுருண்டு கிடக்கிறது. (நன்றி: அருஞ்சொல் )

## கொரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் எதிர்காலத்தில் தரம் ஒன்றிற்கான மாணவர் சேர்க்கை குறையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் கல்வி முறையின் மீது மாணவர்கள் நம்பிக்கை இழந்து வருவதால் பாடசாலை கல்வி முறையில் இருந்து விலகி, மேலதிக வகுப்பு நோக்கி அவர்கள் ஈர்க்கப்படுகின்றனர்.

எனவே மாணவர்களுக்கு நாட்டின் கல்வி முறையில் நம்பிக்கை கொண்டு வரும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

## கொரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விநிறுவனத்தின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

குற்றச்செயல்கள் தொடர்பில் செயற்படுதல் மற்றும் தொற்று நோய்கள் தொடர்பில் விரிவாக இனங்காணுவதற்கான பயிற்சி வேலைத்திட்டங்கள் இந்த நிலையத்தின் ஊடாக மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதற்கமைய, இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான ஆதரவுகளை வழங்குமாறு சபாநாயரிடம் கோரிக்கை விடுத்தனர்.

## மைத்திரிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவகாசம் வழுங்கப்பட்டிருந்தது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான நவாஸ், ஜனக் டி சில்வா, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரருக்கு எதிரான கடிதத்தை மீளப்பெறுவதா, இல்லையா என்ற தீர்மானத்தை அறிவிப்பதற்கு தமது சேவை பெறுநருக்கு கால அவசகாசம் தேவைப்படுவதாக மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் மைத்திரிபால சிறிசேன, பதில் பொதுச் செயலாளர் சரத் ஏக்கநாயக்க ஆகியோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதற்கிணங்க, இரண்டு வார கால அவகாசம் அளித்து, அடுத்த அமர்வில் தமது தீர்மானத்தை தெரிவிக்குமாறு, மனுதாரர்களுக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

தம்மைக் கட்சி உறுப்புரிமையிலிருந்தும் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கு சிறீ லங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானத்திற்கு எதிராக தயாசிறி ஜயசேகர கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

எனினும், தயாசிறி ஜயசேகரவை நீக்கும் தீர்மானத் தை நடைமுறைப் படுத்துவதைத் தடுக்கும் தடை உத்தரவை பிறப்பிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மறுத்துவிட்டது.

அந்தத் தீர்மானத்தை எதிர்த்து மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் தயாசிறி ஜயசேகர மீண்டும் மனுவொன்றை தாக்கல் செய்த போதிலும், அதற்கான தடை உத்தரவை பிறப்பிக்க அந்த நீதிமன்றமும் மறுத்துவிட்டது.

அதனையடுத்து, குறித்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தயாசிறி ஜயசேகர உயர் நீதிமன்றில் இந்த மேன்முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார். இந்த மனு ஜூன் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# திருமலை ஸாஹிரா மாணவருக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது

## எம்.எஸ்.தௌபீக் எம்.பி. காட்டம்

திருகோணமலை ஸாஹிரா கல்லூரியில் உயர்தரப் பரீட்சை எழுதிய எழுபது மாணவியரது பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சிரமப்பட்டு கல்வி கற்று பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவர்கள் எனத் தெரிவித்துள்ளார் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்.

பர்தா அணிந்து பரீட்சை மண்டபத்துக்கு சென்றதால் அவர்களுடைய அடையாளம் சரியாக உறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டு பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டு ஸாஹிரா கல்லூரி மாணவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அங்கு அவர் இது தொடர்பாக கூறுகையில் -

இவ்விடயம் தொடர்பில் நானும் பரீட்சை திணைக்களத்துக்கு சென்று உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடினேன். ஓரிரு வாரங்களுக்குள் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடவிருப்பதாகத் தெரிவித்தனர்.

பெறுபேறுகளை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முத்துநகர் பிரதேசமானது சுமார் 1970ஆம் ஆண்டு முதல் விவசாயம் செய்துவந்த காணிகளைத் தனியாருக்குக் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

அம்மக்களின் வாழ்வாதாரங்கள் அந்த விவசாய காணியிலேயே தங்கியிருப்பதால் அக்காணிகளை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்கி, தனியாருக்கு வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும்.

அதேபோல் நல்லாட்சி காலப்பகுதியில் வழங்கப்பட்ட திட்ட உதவியாளர் நியமனமானது அவர்கள் கடமைக்கு சென்று ஓரிரு வாரங்களுக்கும் இடைநிறுத்தப்பட்டது. இதனால் அவர்கள் பல்வேறு பொருளாதார சவால்களை எதிர்கொள்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு அந்த நியமனங்களை மீள வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சபையில் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை, திருகோணமலை தொகுதியிலுள்ள சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை சுட்டிக்காட்டியதுடன், அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்ட அஸ்வெசும திட்டத்தில் சில முறைகேடுகள் இருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

உரிய அதிகாரிகள் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (05)







# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மன்னாரில் கண்டல் தாவர நடுகை

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மன்னார் பெரிய பாலம் மற்றும் தள்ளாடி இடை நடுவில் காணப்படும் கரையோரப் பகுதிகளில் நேற்று (புதன்கிழமை) காலை கண்டல் தாவரங்கள் மீள் நடுகை செய்யப்பட்டன.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலகம் இணைந்து மெசிடோ நிறுவனத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு மரம் நடுகையை ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி நிகழ்வுக்கான 300 கண்டல் தாவரங்களை டினோஸா கண்டல் தாவரப் பள்ளி வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் மன்னார் நகர பிரதேச செயலாளர் ம.பிரதீப் ,மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கனகரெத்தினம் திலீபன், மன்னார் மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ சுற்றுச்சூழல் கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# தியாகி பொன் சிவகுமாரன் சிலையில் அஞ்சலி







பொன் சிவகுமாரனின் 50 ஆவது நினைவேந்தல் இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்ட பொன் சிவகுமாரனின் திருவுருவச்சிலையில் தமிழ்த் தேசியவாதிகளால் நேற்று காலை உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் மற்றும் அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன, அதன் செயலாளா தனுபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அகவணக்கம் செலுத்தியதுடன் திருவுருவச் சிலைக்கு தீபமேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

உயிர் தமிழுக்கு உடல் மண்ணிற்கு என்ற இலட்சியத்துடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னுயிர்த் தியாகம் செய்த தியாகி பொன் சிவகுமாரன் அவர்களது உருவச்சிலை 05 ஜூன் 1975 ஆம் ஆண்டு சிறைமீண்ட இளைஞன் முத்துக்குமாரசுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினராலும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய தரப்புக்களாலும் அச் சிலை பலதடவைகள் உடைத்து நொருக்கப்பட்டு உரும்பிராய் சந்தை வளாகத்தில் வீசப்பட்டு புதையுண்டு கிடந்த நிலையில் அதனை மீள எடுத்து சிவகுமாரனின் சிலை அமைத்த அதே இடத்தில் வளாகத்தின் ஒருபகுதியில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் பிரதிஸ்டை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# நல்லூர் பிரதேச செயலகத்தில் உலக சுற்றாடல் தின நிகழ்வு





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகம் ஏழுநாள்களும் ஏழு வகையான செயற்றிடங்களை முன்னெடுத்திருந்தது.

இறுதிநாள் நிகழ்வாக பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு ஊர்வல் பிரதேச செயலகத்தில் இருந்து சங்கிலியன் பூங்கா வரை நடைபெற்றது.

தொடர்ந்து சங்கிலியன் பூங்காவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் இயற்கை பாதுகாப்பு எனும் தொனிப்பொருளில் வீதி நாடகமும் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள். கலந்து கொண்டனர்.

தொடர்ந்து உலக சுற்றாடல் தின நிகழ்வு பிதேச செயலகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சுற்றுச்சூழல் தொடர்பாக உத்தியோகத்தர்களுக கிடையில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.இறுதியாக கிராம உத்தியோகத்தர்களின் நாடகம் நடைபெற்றது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் அரசியல் அபிலாசைக்கான வழிகாட்டி தியாகி பொன். சிவகுமாரன்

## வலி.கிழக்கு முன்னாள் தவிசாளர் நிரோஷ் அஞ்சலி உரை



போராட்ப் பயணப்பாதையில் இனத்திற்கான மாணவர் எழுச்சி யின் வடிவமாக சிவகுமாரனின் எழுச்சியையும் தியாகத்தையும் என்றும் நினைவில் கொள்கின்றோம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தியாகி பொன் சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவு நாளான இன்று நாம் தமிழ்த் தேசியவாதிகளால் நிர்மாணிக்கப்பட்டு இராணுவத்தினராலும் இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கியவர்களினாலும் தகர்க்கப்பட்ட நிலையில் என்னால் மீள பிரதிஸ்டை செய்யப்பட்ட திருவுருவச்சிலையில் அஞ்சலித்து உறுதிபூணுகின்றோம்.

உயிர் தமிழுக்கு உடல் மண்ணிற்கு என்ற இலட்சியத்துடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னுயிர்த் தியாகம் செய்த தியாகி பொன் சிவகுமாரன் அவர்களது உருவச்சிலை 05 ஜூன் 1975 ஆம் ஆண்டு சிறைமீண்ட இளைஞன் முத்துக்குமாரசுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினராலும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய தரப்புக்களாலும் இச் சிலை பலதடவைகள் உடைத்து நொருக்கப்பட்டு உரும்பிராய் சந்தை வளாகத்தில் வீசப்பட்டு புதையுண்டு கிடந்த நிலையில் அதனை மீள எடுத்து சிவகுமாரனின் சிலை அமைத்த வளாகத்தின் நான் தவிசாளராக பதவி வகித்தபோது பிரதிஸ்டை செய்தேன். எமது இனவிடுதலைக்கான வரலாறுகளை வழிகாட்டியாக நாம் கைக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிரான அரச அடக்கு முறை இன்றும் நீட்சியாக காணப்படுகின்றது. எமது உரிமைகளுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த சிவகுமாரனின் அர்ப்பணிப்பினை ஒட்டுமொத்த தமிழ் இனமும் நினைவுகூர்கின்றது.

அரச அடக்குமுறைக்கும் வன்முறைக்கும் அஹிம்சை வழிலான அணுகுமுறைகள் பயனற்றுப் போன சூழ்நிலையில் அரச அடக்குமுறையை எதிர்கொண்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் மக்களின் மனநிலை நின்ற விடுதலைப்போராட்ட வீரனாகவே பொன். சிவகுமாரன் செயற்பட்டார்.

பொன் சிவகுமாரன் இனத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக ஓர் இளையவனாக மாணவர் விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக கட்சி அரசியல் விடயங்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்த் தேசிய விடுதலையை இலக்காகக் கொண்டு போராட்ட அமைப்புக்கள் நிறுவனமயப்படுத்தப்படாத காலகட்டத்தில் தனது தியாகத்தினை நிலைநாட்டியுள்ளார். எதிரியிடம் விடுதலைப்போராளிகள் உயிருடன் அகப்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில் தன் இன்னுயிரை சயனைட் அருந்தி மாய்த்துள்ளார்.

விடுதலைப்போராட்டம் ஒடுக்குமுறைகளுக்கு எதிரானது என்ற நியாயபூர்வமான யதார்த்தத்தினை பொன். சிவகுமாரன் அவர்களது தியாகம் என்றும் பறைசாற்றுகின்றது. தமிழ் மாணவர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு கொண்டுவரப்பட்ட கல்வி ரீதியிலான தரப்படுத்தல்கள், உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் என நீண்டு செல்லும் இனத்திற்கு எதிரான அநீதிகளிற்கு எதிராக பொன். சிவகுமாரன் போராடியுள்ளார்.

எமது போராட்டங்களின் முன்னோடியாக தியாகி சிவகுமாரனை என்றும் நினைவில் கொள்கின்றோம். இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். (05)

# ஜெனிவாவில் செந்தில் தொண்டமான் வசந்த சமரசிங்கவைச் சந்தித்தார்



ஜெனிவாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் என்.பிபியின் தொழிற்சங்கவாதியான வசந்த சமரசிங்கவை ஜெனிவாவில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது குறித்து பேசப்பட்டது.

அத்துடன், இருவருக்குமான நீண்டகால நட்பு பற்றியும், உலகளவில் தொழிற்சங்கத்தின் நலனில் இருவரும் வலுவாக இணைந்து பணியாற்றியமையும் இதன்போது நினைவூட்டப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் ராஜதுரையும் உடனிருந்தார .(05)

# சிறுவன் தாக்கப்படும் காணொளி சந்தேகநபர் உட்பட மூவர் கைது

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட 4 வயது சிறுவன் தாக்கப்படும் காணொளி தொடர்பில் பிரதான சந்தேக நபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று (புதன்கிழமை) அதிகாலை புல்மோட்டை அரிசிமலை பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான 45 வயதுடைய பிபிலே சமிந்த என்ற குகுல் சமிந்த என்பவரும் 37 மற்றும் 46 வயதுடைய இரு பெண்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் வெலிஓயா கல்யாணபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் தாக்கப்பட்ட சிறுவன் பொலிஸாரின் பொறுப்பில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. (05)

# பல பிரதேச செயலக பிரிவுகளில் 7 நாள்கள் மதுபானசாலை பூட்டு

நாட்டில் பல பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள மதுபானசாலைகளை 7 நாள்களுக்கு மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொசன் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மத்திய நுவரகம், கிழக்கு நுவரகம் மற்றும் மிஹிந்தலை பிரிவு 03 ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் அக்காலப்பகுதியில் மூடப்படவுள்ளன. (05)

# மே மாதம் 25,000 பேருக்கு டெங்கு நோய்த் தொற்று

இவ்வருடத்தின் மே மாதத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தில் ஜனவரி மாதத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அதன் பின்னர் பெப்ரவரி , மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் குறைந்தளவான நோயாளர்களே அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால், மே மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார பூச்சியியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் நஜித் சுமனசேன தெரிவித்துள்ளார். (05)

# சகலைகளுக்கு இடையே வாய்த்தர்க்கம்: வீடு புகுந்து தாக்கிய வன்முறை கும்பல்

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

சகலைமாருக்கு இடையிலான வாய்த்தர்க்கத்தை தொடர்ந்து, வீடு புகுந்த வன்முறைக் கும்பலொன்று அவ்வீட்டில் இருந்தவர்களை தாக்கிவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

அப்பகுதியில் உள்ள வீடொன்றில் தாயும் அவரின் மூன்று மகள்களும், மகள்களின் கணவன்மாரும் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில், முதலாவது மகளினதும் மூன்றாவது மகளினதும் கணவன்மார் இருவரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். பின்னர், மூன்றாவது மகளின் கணவர் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். அவர் வெளியேறிய சில மணிநேரங்களில் 7 பேர் கொண்ட வன்முறைக் கும்பலொன்று அவர்களின் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து முதலாவது மகளின் கணவரைத் தாக்கியுள்ளது.

அதைத் தடுக்கச் சென்ற தாயார் மற்றும் மகள்மார் மூவரையும் அந்த கும்பல் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலில் தாய், அவரது மூத்த மகளின் கணவர் ஆகிய இருவரும் காயமடைந்து, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்தாக்குதல் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (05)

# இந்தியத் தம்பதியினர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

மாத்தறை, கிரிந்த கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த இந்தியத் தம்பதியினர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என கிரிந்த பொலிஸார் தெரிவித்தனர். 35 வயதுடைய நபரொருவரும் 33 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் சுற்றுலாவுக்காக குடும்பத்தினருடன் இலங்கைக்கு வருகை தந்துள்ள நிலையில் கிரிந்த கடற்கரையில் நீராடிக் கொண்டிருக்கும் போது திடீரென நீரில் மூழ்கியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இருவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் தெபரவெள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்த பொலிஸார் மேற கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சகல தமிழ்த் தலைவர்களுக்கும் உருவச் சிலை அமைக்கப்படும்

## தியாகி சிவகுமாரன் நினைவேந்தலில் அமைச்சர் டக்ளஸ் உறுதி



தேசிய நல்லிணக்கமும் அணுகுமுறைகளும் மட்டுமல்லாது, எமது தற்துணிவுமே இன்று சிவகுமாரன் சிலை கம்பீரமாக நிமிர்ந்திருக்க காரணம் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் கட்சி மற்றும் இயக்க வேறுபாடுகளின்றி, ஈழப் போராட்டத்தினை முன்னெடுத்த அனைத்து தலைவர்களுக்கும் சிலைகளை அமைத்து, அவர்கள் அனைவரையும் வரலாற்றில் நிலைநிறுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் உயிர்த் தியாகம் செய்த முதல் போராளி பொன் சிவகுமாரனின் 50ஆவது ஆண்டு நினைவுதினத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரும்பிராயிலுள்ள பொன் சிவகுமாரனின் திருவுருவச்சிலை அமைவிடத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து கூறுகையில் -

ஈகைச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய தமிழ் தலைவர்கள், போராளிகள், மக்கள் என பலரும் நினைவுகூரப்பட வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களது நினைவேந்தல்களும் குறிப்பாக அவர்களது நினைவுச் சிலைகள் நிறுவப்படுவதும் அவசியமாகும். இதில் கட்சி பேதங்களோ இயக்க வேற்றுமைகளோ இருக்கப்போவதில்லை.

பொன் சிவகுமாரனது உருவச்சிலை தற்போதுள்ள உருவச்சிலை நிறுவப்படுவதற்கு முன்னர், மூன்று தடவைகள் உடைத்தெறியப்பட்டது. இதற்கு சரியான புரிதல் இன்மையே காரணம் என்று நினைக்கின்றேன்.

ஆனால், 1999களில் அன்றைய அரசுடன் எமக்கிருந்த நல்லுறவு, எமது தேசிய நல்லிணக்க வழிமுறை என்பவற்றுடன் எமக்கிருக்கும் தற்துணிவுமே இந்த சிலையை அமைப்பதற்கும் தலைநிமிர்ந்திருக்கவும் முக்கிய காரணமாக உள்ளது.

அதுபோலதான் யாழ். மணிக்கூண்டு கோபுர சுற்றுவட்டத்திலுள்ள மன்னர்களது சிலைகள், முத்திரைச் சந்தியிலுள்ள சங்கிலியன் சிலை, யாழ். மடத்தடியில் உள்ள தனிநாயகம் அடிகளார் சிலை போன்றனவும் நிறுவப்பட்டன.

இதேவேளை, பொன் சிவகுமாரனது நினைவு நாளான இன்று தமிழர் அரசியல் பரப்பில் உள்ள பல கட்சியின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் என ஒன்றாக கூடியிருப்பது இந்நாளை அனைவரும் எமது இனத்தின் ஒரு பொதுவான நாளாக அடையாளப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இருப்பவற்றை பாதுகாத்துக்கொண்டு இழந்தவற்றை ஈடு செய்யும் வகையில் முன்னோக்கி நகர வேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்துவதை போல, எமது மக்களின் உரிமைசார் விவகாரங்களிலும் நடைமுறை சாத்தியமான முன்னெடுப்புக்களை அனைத்து தரப்பினரும் இணைந்து முன்னெடுக்க முடியும்.

அதேபோன்று, எமது மக்களின் இருப்புக்கள் மற்றும் வரலாறுகள் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கான முயற்சிகள் அனைத்துக்கும் நாம் முழுமையான ஒத்துழைப்புகளுடன் முயற்சிகளையும் மேற்கொள்ள தயாராக இருக்கின்றோம். - எனவும் தெரிவித்துள்ளார். (05)

## வன்னேரி, ஆனைவிழுந்தான் கிராமங்களுக்கு குழாய் வழி குடிநீரை கோருகின்றனர் மக்கள்

*கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராம மக்கள் தங்களது கிராமங்களுக்கு குழாய் வழி குடிநீர் விநியோகத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*மேற்படி கிராமங்களின் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பெருமளவில் உவராகவும் மாற்றமடைந்துள்ளது எனவும், உவராகும் நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையாலும் பொதுமக்கள் குடி நீர் உள்ளிட்ட நீர்த் தேவையை பூர்த்தி செய்துகொள்ள கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ள மக்கள் தங்கள் கிராமங்களின் பல பகுதிகளின் நிலமும், நீரும் உவராகி வருகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.*

*இந் நெருக்கடி காரணமாக பொது மக்கள் நீண்ட தூரம் பயணித்து இராணுவ முகாம் மற்றும் ஆலயங்களில் குடிநீரை பெற்று வருகின்றனர். வன்னேரிக்குளம் கிராமத்தில் சுமார் 480 குடும்பங்களைச் சேர்ந்த 1,650 பேரும் ஆனைவிழுந்தான் கிராமத்தில் 439 குடும்பங்களைச் சேர்ந்த 1,365 பேரும் வசிக்கின்றனர்.*

*அத்தோடு வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான் ஐயனார்புரம் ஆகிய இரண்டு பாடசாலைகள் காணப்படுகின்றன. இங்கு ஆனைவிழுந்தான் பாடசாலையில் 254 மாணவர்களும் , வன்னேரிக்குளம் பாடசாலையில் 169 மாணவர்களும் கல்வி பயில்கின்றனர். இக் கிராமங்களில் நிலவுகின்ற நீர் பிரச்சினை காரணமாக இவர்களின் பாடசாலை வரவு நேரம், மற்றும் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*எனவே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குழாய் வழியிலான குடிநீர் விநியோகத்தை மேற்படி கிராமங்களுக்கும் வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பொது மக்கள் கோரியுள்ளனர். (05)*

## மண்வெட்டியால் தாக்கப்பட்டு களுத்துறையில் ஒருவர் காயம்

*களுத்துறை, வாதுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொத்துபிட்டிய பிரதேசத்தில் மண்வெட்டியால் தாக்கப்பட்டு ஒருவர் காயமடைந்துள்ளார் என வாதுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. வாதுவை, பொத்துபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.*

*சம்பவம் குறித்து தெரியவருவதாவது -*

*வீட்டிலிருந்த தந்தையுடன் மண்வெட்டியுடன் வந்த நபரொருவர் தகராறில் ஈடுபட்டுள்ளார்.*

*இதன்போது, இந்த நபர் தந்தையை மண்வெட்டியால் தாக்க முயன்றுள்ள நிலையில் மகன் அவரை தடுக்க முற்பட்ட போது காயமடைந்துள்ளார்.*

*காயமடைந்த மகன் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*இதனையடுத்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். வாதுவை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடையநபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*

## கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற கைதி தப்பி ஓட்டம்

கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைதி சிறைச்சாலை அதிகாரியிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அம்பிட்டிய பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவருக்கு தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரே தப்பிச் சென்றுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேற்படி 36 வயதுடைய சந்தேகநபர் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் தமிழகத்தில் தஞ்சம்



ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேர் நேற்று (புதன்கிழமை) அதிகாலை தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் இருந்து மன்னாருக்கு சென்று, மன்னாரில் இருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக படகு மூலம் புறப்பட்டு, நேற்று அதிகாலை ராமேஸ்வரம் அடுத்த சேராங் கோட்டையை அடைந்துள்ளனர்.

தாய், தந்தை, நான்கு பிள்ளைகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் ராமேஸ்வரத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கை தமிழர்களான இந்த ஆறு பேரையும் மீட்ட மரைன் பொலிஸார் மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர. (05)

## மீள்பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம்

### க.பொ.த உயர்தரம்

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்றுக் கொள்ளப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்களானவை ஜூன் மாதம் 19 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இணையதளத்தின் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் எனத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.(05)

## அப்புத்தளை பிட்ரத்மலை 7பி பிரிவு பாதை நிர்மாணத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டது





10 லட்சம் ஷரூபா நிதி ஒதுக்கீட்டினூடாக, அப்புத்தளை பிட்டரத்மலை 7பி பிரிவு பாதை நிர்மாணத்திற்காக அடிக்கல்லை , கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் நேற்று (புதன்கிழமை) நாட்டினார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.06.2024இல் வெளியிடப்பெற்றது